பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 7 திங்கட்கிழமை (23.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 236

# மன்னார் முன்னரங்கப் பகுதிகளில் படையினரின் முன்நகர்வு முறியடிப்பு

## 3 மணி நேரம் தொடர் கடும் சமர்

வவுனியா,ஜூலை23

மன்னார் - வவுனியா வீதியில், தம்பனை மற்றும் முள்ளிக்குளம் ஆகிய முன்னரங்க நிலைகளால் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மூன்று மணிநேரம் கடும் சண்டை நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை தொடர்ச்சியாக சண்டை நடைபெற்றதாகவும் மாலை 6 மணியளவில் படையினர் அவர்களது நிலைகளுக்கு விரட்டப்பட்டனர் என்றும் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் செய்தி ஏஜென்சிகளுக்கு அறிவித்தார்.

மன்னாரில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்றதாக இராணுவத் தரப்பு கொழும்பில் உறுதி செய்தது. ஆனால் எந்த விவரங்களையும் நேற்றிரவு 10 மணிவரை வெளியிடவில்லை.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் முன்னேறும் முயற்சியில், தம்பனை மற்றும் முள்ளிக்குளம் முன்னரங்கப் பகுதிகளால் இருமுனை முன்நகர்வு படை நடவடிக்கையை இராணுவத்தினர் ஆரம்பித்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை மூண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், மாலை 6 மணியளவில் தமது போராளிகள் இராணுவத்தினரை அவர்களின் பழைய நிலைகளுக்கு விரட்டியதாகப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

படைத் தரப்பில் உயிரிழப்புகளும் ஆயுத இழப்புகளும் பெருமளவில் இருந்ததாகத் தெரிவித்த புலிகளின் இராணுவப் பேச்சாளர், தமது தரப்பினர் நேற்றிரவு நிலைகளை ஸ்திரப்படுத்தியதாகவும் தேடுதல் பணிகளில் ஈடுபட்டிருந்ததாகவும் நேற்றிரவு 10 மணியளவில் அறிவித்தார். விடுதலைப் புலிகள் தரப்பில் 5 போராளிகள் சாவடைந்தனர் என்றும் அவர் சொன்னார்.

மன்னார் - வவுனியா (08ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக முன்வீதியில் சனி இரவு வெள்ளைவான் நடமாடியதால் பதற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை23

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாக, பல்கலைக்கழக மாணவர்கள் பலர் தங்கியிருக்கும் வீடுகள் அமைந்துள்ள குமாரசாமி வீதியில், நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் வெள்ளைவான் நடமாடியதால் அங்கு பெரும் பதற்ற நிலை நிலவியது.

மோட்டார் சைக்கிளிலும் வெள்ளை வானி லும் சிவில் உடையில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் அப்பகுதியில் உள்ள வீடுகளின் சுற்றாடலில் திரிந்ததால் பதற்றம் நிலவியது.

கலை, மருத்துவம், விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள், மாணவிகள் தங்கியிருக்கும் அப்பகுதியில் வெள்ளை வான் நடமாடியதால் அவர்கள் மத்தியில் ஒரு மணிநேரம் பெரும் அச்சநிலை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கொழும்பில் தமது சேவைக் காலத்தை முடித்துக்கொண்டு விரைவில் ஒஸ்லோ திரும்புகிறார். அதனை ஒட்டிய பிரியாவிடை வைபவம் கொழும்பில் உள்ள தூதரின் இல்லத்தில் இடம்பெற்ற போது 'உதயன்', 'சுடர் ஒளி' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் தூதருக்கு கைலாகுகொடுத்து பிரியாவிடை வழங்கும் காட்சி.

'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகள் மிக மோசமான வன்முறைத் தாக்குதலுக்கு உள்ளான சமயங்களில் இராஜதந்திர வட்டாரங்களில், அதிக கரிசனையுடன் அந்த விடயங்களை ஒட்டிய பதில் நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டியவர்களில் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் முக்கியமானவர். 'உதயன்', 'சுடர் ஒளி' பணிமனைகளுக்கு நேரடியாக விஜயம் செய்து துணிச்சலான பத்திரிகைப் பணியை ஊக்கப்படுத்தியவர் அவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சமஷ்டித் தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை; மாகாண சபை குறித்து சர்வஜன வாக்கெடுப்பு

### கட்சித் தலைவர்களிடம் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை23

* இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறைத் தீர்வு காண்பது என்ற பேச்சுக்கே இடமில்லை
* இப்போது நடைமுறையில் உள்ள மாகாண சபை முறைக்கு மக்களின் அங்கீகாரம் பெறுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பற்றியும் அரசு ஆராய்கிறது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் தமது கண்டி வாசஸ்தலத்தில் நடத்திய கூட்டம் ஒன்றில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இத்தகவல்களைத் தெரிவித்ததாக அறியவந்துள்ளது.

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் வகையிலான நிர்வாக முறை ஒன்றுக்கே மக்கள் எனக்கு ஆணை தந்தனர். சமஷ்டி முறையை ஏற்படுத்துவதற்கு மக்கள் எனக்கு ஆதரவு வழங்கவுமில்லை; ஆணை தரவுமில்லை. எனவே, சமஷ்டி என்ற பேச்சுக்கே துளியும் இடமில்லை -

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையையோ அல்லது (08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசு மீது ஜேர்மன் அதிருப்தி!

கொழும்பு,ஜூலை23

இலங்கைக்கான ஜேர்மனியத் தூதர் யூர்ஜென் வீர்த் மீது அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சுமத்தியிருக்கின்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக இலங்கை அரசிடம் விளக்கம் கோருவதற்கு ஜேர்மன் அரசு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

''கொழும்புக்கான ஜேர்மன் தூதர் இலங்கை அரசுக்கு நெருக்கடி ஏற்படும் வகையில் செயற்படுகின்றார். அதனால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது'' (08ஆம் பக்கம் பார்க்க)

## 83 கறுப்பு ஜூலைக் கலவரம் மெல்பேர்னில் நினைவுகூரல்

கொழும்பு,ஜூலை23

83 கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலையை நினைவு கூரும் ஒன்றுகூடல் நிகழ்வொன்று ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழினம் மீது நடத்தப்பட்ட இன அழிப்பையும், அட்டூழியங்களையும் நினைவு கூருவதோடு, ஈழத்தமிழர்கள் மீது தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தமிழினப்படுகொலைகள், மனித உரிமை மீறல்களை - கண்டிக்கும் வகையில் இந்த ஒன்றுகூடல் (08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாணப் பிரதம செயலாளராக விமானப்படை அதிகாரி குமரேசன் நியமனம்

திருகோணமலை,ஜூலை23

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராக விமானப்படை அதிகாரியான ஏயர் கொமடோர் எஸ்.குமரேசன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பான கடிதம் நேற்று ஆளுநர் அலுவலகத்துக்குக் கிடைத்ததாக மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானப்படையின் தலைமையகத்தில் திட்டமிடல் பிரிவுப் பணிப்பாளராக கொமடோர் குமரேசன் பணியாற்றி வந்தார்.

பிரதம செயலாளராகப் பணியாற்றிய ஹேரத் அபயவீர கடந்த 16ஆம் திகதி அவரது (08ஆம் பக்கம் பார்க்க)

### மூதூர் கிழக்கை பாதுகாப்பு வலயமாக்கியதை எதிர்த்து

## வடக்கு, கிழக்கிலும் புலம்பெயர் நாடுகளிலும் பணிப்புறக்கணிப்பு நடத்தக் கூட்டமைப்பு அழைப்பு

கொழும்பு, ஜூலை 23

மூதூர் கிழக்கை அரசு அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியிருப்பதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக, வடக்கு - கிழக்கிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் வாழுகின்ற தமிழர்களையும் நாளைமறுதினம் புதன்கிழமை ஒரேநேரத்தில் பெரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளனர்.

இந்தப் பணிப் புறக்கணிப்புக்கான அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்திருக்கின்றது.

பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் கபளீகரம் செய்யப்படுகின்றன என்ற உண்மை நிலையை உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் அம்பலப்படுத்துவதற்கு இந்தப் பணிப்புறக்கணிப்பு வழிகோலும் என்பதால் புதனன்று தமிழர்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக தமது பணிகளைப் புறக்கணிக்கவேண்டும் என்று தமிழ்க் கூட்டமைப்பு கேட்டிருக்கின்றது.

இதுதொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்திருக்கின்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

மூதூர் கிழக்கை அதி உயர் பாதுகாப்பு (08ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா விலை 4 ரூபாவால் உயர்வு

கொழும்பு,ஜூலை23

சனிக்கிழமை தொடக்கம் கோதுமை மாவின் விலை நான்கு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 47 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த ஒரு கிலோ கோதுமைமா தற்போது 51 ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

இந்நிலையில் மோதுமை மாவின் விலை உயர்வுக்கு ஏற்ப பாண் உள்ளிட்ட பேக்கரித் தயாரிப்புகளின் விலைகளும் அதிகரிக்கப்படவேண்டும் என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கேட்டிருக்கின்றது.

ஒரு கிலோ, கோதுமை மாவின் விலை (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரிசி விற்பனையில் நிபந்தனை விதிக்கக் கூடாது ப.நோ.கூ.சங்கங்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்.செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரிசியை எந்தவித நிபந்தனையும் இன்றிப் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்ய வேண்டும்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கு மேற்கண்டவாறு அறிவித்தலை விடுத்துள்ளார்.

அரிசியை வாங்குவதற்கு வேறு பொருள்களையும் வாங்க வேண்டும் என்று ப.நோ.கூ.சங்கங்கள் பலவும் நிர்ப்பந்திப்பதாக தெரிவிக்கப்படும் முறைப்பாட்டை அடுத்து அரச அதிபர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ப.நோ.கூ.சங்கங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரிசியை செயலகக் களஞ்சியங்களில் இருந்து பெற்று பாவனையாளர்களுக்கு விற்பனை செய்ய வேண்டும். அரிசியைக் கொள்வனவு செய்யும் பாவனையாளர்களை வேறு ஒரு பொருளைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கக் கூடாது - என்று அரச அதிபர் தெரிவித்தார்.

எக்காரணம் கொண்டும் அரிசியை தனியாருக்கு விற்கக்கூடாது என்றும் ப.நோ. கூ. சங்கங்களை அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-1)

# வடக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் தலைவர், உறுப்பினர்கள் பதவி விலகினர்

மட்டக்களப்பு,ஜூலை23

வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவர் எஸ்.சிவதாசனும் ஏனைய இரு உறுப்பினர்களும் பதவி விலகியுள்ளனர். அவர்கள் தமது ராஜினாமாக் கடிதங்களை கையளித்துள்ளனர்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் திணைக்களங்களின் தலைவர்களும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் ஆணைக்குழு தன்னிச்சையாக செயற்படுவதாக அதிருப்தி வெளியிட்டு வந்தனர்.

இத்தகைய ஒரு பின்னணியில் மாகாண ஆளுநர் விடுத்த உத்தரவை அடுத்தே ஆணைக்குழுவின் தலைவரும் ஏனைய இரு உறுப்பினர்களும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர் என்று சொல்லப்படுகிறது. வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜனிடம் ஆணைக் குழுவின் தலைவர் எஸ்.சிவதாசனும் ஏனைய உறுப்பினர்களான எஸ்.இக்பால், எஸ்.கவிரத்தின ஆகிய இருவரும் தமது பதவி விலகல் கடிதங்களை சமர்ப்பித்தனர்.

(அ-228)

# அல்வாய் வடக்கில் அட்டகாசம் புரிந்த பதினொரு இளைஞர்கள் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம்,ஜூலை23

அல்வாய் வடக்குப் பகுதியில் அட்டகாசம் புரிந்துவந்த 11 பேர் பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இளம் பெண்களுடன் சேஷ்டை விடுதல், வீடுகளுக்குக் கல் எறிதல், கால்நடைகளைக் களவாடுதல் போன்ற சமூக விரோதக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் ஈடுபடுவதாக அப்பகுதி மக்கள் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸார் 11 இளைஞர்களையும் நேற்றுக் கைதுசெய்தனர்.

பிரஸ்தாப நபர்களை பொலீஸார் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்தனர்.

அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதர் நீக்கம்

சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதர் ஏ. எம். ஜே. சாதிக்கை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு இலங்கை அரசு முடிவு செய்திருக்கின்றது. பணிகளை நிறுத்தி உடனடியாக இலங்கைக்குத் திரும்பி வருமாறு அவருக்கு வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டிருக்கின்றது.

சவூதியில் மரணதண்டனையை எதிர்நோக்கியுள்ள இலங்கைப் பெண்ணான ரிஸானா விவகாரம் தொடர்பாக அந்நாட்டு அரச தரப்பினருடன் பேச்சு நடத்த பிரதி அமைச்சர் ஹுசைன் பைலா கடந்த வெள்ளிக்கிழமையன்று சவூதி சென்றிருந்தார்.

இருப்பினும் அமைச்சர் ஹுசைன் பைலா, சவூதி அரசுத் தரப்பினருடன் பேச்சுகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை சவூதிக்கான தூதர் சாதிக் மேற்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

அதேபோல் சிறையில் உள்ள ரிஸானாவை சந்திக்கவும் அமைச்சர் மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. சவூதிக்கான தூதர் சாதிக் இது தொடர்பில் முறையான ஒழுங்குகளை மேற்கொள்ளவில்லை என்று கருதி அவரைபதவிநீக்க அரசு முடிவு செய்துள்ளது எனக் கூறப்பட்டது. (சி)

## மல்லாகம் நீதிமன்றத்தில் தத்துக்கொடுக்க மூன்று குழந்தைகள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

மல்லாகம் நீதிமன்றத்தின் பொறுப்பில் உள்ள மூன்று குழந்தைகள் தத்துக் கொடுக்கப்படவிருக்கின்றனர்.

தத்துக் கொடுப்பது தொடர்பான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

குழந்தைகளைத் தத்து எடுக்க விரும்பும் பெற்றோர் சமுகமளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வடக்கு, கிழக்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

வலயமாகச் ஸ்ரீலங்கா அரசு பிரகடனப்படுத்தியதற்கு எதிர்ப்பைக் காட்டுமுகமாக, நாளைமறுதினம் ஜூலை 25ஆம் திகதி வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலும் கடமைப் புறக்கணிப்பும், கதவடைப்பும் செய்து ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறலுக்கு எதிர்ப்புக்காட்டு மாறு தமிழ் பேசும் மக்களையும், அப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் சகோதர இன மக்களையும் தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, மூதூர் கிழக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு கண்மூடித்தனமான விமான, பல்குழல் எறிகணைத் தாக்குதல்களை மிகக் கொடூரமாக நடத்தி நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொது மக்களைக் கொன்றொழித்தும், ஆயிரக் கணக்கானோரைக் காயப்படுத்தியும் அப்பகுதி மக்களை உடுத்த உடுப்புடன் வெளியேற வைத்தது.

**இயல்பு வாழ்க்கை முற்றாகச் சீரழிப்பு**

இம்மக்களின் வீடு வாசல்கள், உடைமைகள், கால் நடைகள், பாடசாலைகள், கோயில்கள், பொதுக்கட்டடங்கள் சேதமாக்கப்பட் டும் சூறையாடப்பட்டும், கல்வி, பொருளா தாரம், இயல்பு வாழ்க்கை முற்றாக சீரழிக்கப்பட்டுள்ளது.

மூதூர் கிழக்கில் ஏறக்குறைய 28 கிராமங்களில் 4 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்துவந்தார்கள். இப்பிரதேசத்தில் 19 பாடசாலைகளும், 25 இற்கும் மேற்பட்ட வணக்க ஸ்தலங்களும் பல பொதுக் கட்டடங்களும் இருந்தன. வளமான வயல் நிலங்களையும், தோட்ட நிலங்களையும், 88 சிறு குளங்களையும் உள்ளடக்கிய பிரதேசம் இது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் பல கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து வீடமைப்புத் திட்டங்களையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன.

**அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர்**

இப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இன்று அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களிலும், மூதூர் கிளிவெட்டி அகதி முகாம்களிலும் பல துன்ப, துயரங்களுடன் முடங்கிக் கிடக்கின்றனர். காணாமல் போதல், கொலை செய்யப்படுதல் போன்ற சம்பவங்களுக்கு இம் முகாம் மக்களும் விதிவிலக்கல்ல.

மூதூர், சேருவில பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த அரசு உடனடி நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால் ஒரு வருடத்திற்கு மேலாகியும், மூதூர் கிழக்கு மக்களைப் பொறுத்தவரையில் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை.

**அபிவிருத்தி என்பது வேடிக்கையானது**

இதற்குப் பதிலாக இப்பிரதேசத்தை அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. கடந்த காலங்களில் அப்பிரதேச அபிவிருத்தியில் எதுவித அக்கறையும் கொள்ளாத அரசு அப்பகுதி மக்களை விரட்டியடித்துவிட்டு அபிவிருத்தி செய்ய முனைவது வேடிக்கையாகவுள்ளது.

இம் மனித உரிமை மீறல் செயற்பாடுகளைக் கண்டித்து, எவ்வித வன்செயல்களிலும் ஈடுபடாது சாத்வீக முறையில் வீடுகளிலிருந்து தங்கள் அனைவரதும் எதிர்ப்பை அரசுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் உணர்த்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் தாங்கள் ஒவ்வொருவரும் வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு மனப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (சி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஸ்ட கணித ஆசிரியர் பொ.இரத்தினராசா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பொன்னையா நாகம்மா**

அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வில் கலந்துகொள்வதோடு அன்னாரது குடும்பத்தினரது துயரிலும் பங்கு கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி.

- பாடசாலைச் சமூகம்.

## கண்ணீர்க் காணிக்கை

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய பிரதம குருவும் சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்களின் மைந்தரும் புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் பிர தமகுரு சிவ ரமேஸ்சர்மா அவர்களின் சகோதரரும் புங்குடுதீவு பெருங்காடு மதுரையம்பதி சிவன் தேவஸ்தான சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்களின் மருமகனும் நா.அருணோதயக் குருக்களின் மைத்துனருமாகிய


**அமரர் சிவஸ்ரீ தினேஸ்சர்மா**

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைந்துள்ளதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

மடத்துவெளி நுழைவாயில் பிள்ளையார் தேவஸ்தான பரிபாலன சபை,
ஊரதீவு பானாவிடை சிவன் தேவஸ்தானம் பரிபாலன தர்மகர்த்தா சபை,
மடத்துவெளி வயலூர் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் தேவஸ்தான பரிபாலன சபை,
புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய - பரிபாலன சபை,
புங்குடுதீவு மேற்கு பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை,
(62865) புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் பரிபாலன தர்மகர்த்தா சபை.

## கண்ணீர் அஞ்சலி



*யா/ அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய ஆசிரியர் பெ.ஜெ.நிரேசன் அவர்களின் அன்புத்தந்தை*

**அமரர் சிந்தாத்துரை பெனடிக்ற்**

*அவர்கள் நேற்று (22.07.2007) காலமாகி விட்டார்.*

*அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

யா/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.

(62861)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கைத்தொழில் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராக பணியாற்றும் எமது சக உத்தியோகத்தர் **ந.யசோதரா** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் கண்மணி நடராஜா**

அவர்கள் 21.07.2007 இல் காலமானதையிட்டு அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிச் சங்கம்,**
பிரதேச செயலகம், வலி.தெற்கு, உடுவில்.

(62862)

## கண்ணீர் காணிக்கை



எமது உயிர் நண்பன் நிரோஷின் அன்புத் தந்தை

**அமரர் செல்லத்துரை சண்முகதாசன்**

*(Aldi Electronic)*

உயிரினும் மேலான உறவாய் இருந்தீர்
இனி எம் உயிர் உள்ளவரை
நினைவில் இருப்பீர்

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- அத்தியடி நண்பர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சிவகுரு கமலாம்பிகை

பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் 241 2/4 W.A. சில்வா மாவத்தை, கொழும்பு - 6 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு கமலாம்பிகை நேற்று (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு - அழகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும் நவரட்ணம், சரஸ்வதி, அமரர் யோகாம்பிகை, சந்திரகாந்தி, பாலகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும் சத்தியபாமா (கொழும்பு), சந்திரசேகரம் (கனடா), தங்கவடிவேலு (தும்பளை), சுபத்திரா (ஜேர்மனி), சித்திரா (திருகோணமலை), சிவபாதசுந்தரம் (கனடா), சத்தியசீலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும் குவேந்திரராஜா, யசோதரா, பிறேமாதேவி, லோகநாதன், பாலசுப்பிரமணியம், ஜெயசக்தி, சுசி ஆகியோரின் மாமியாரும் சத்தியா, சிவகுபேரன், மதுரா, கஜன் (பிரான்ஸ்), சுஜன், சிவக்கண்ணன், சிவராதை, லாவன்ஜா (யாழ்.மருத்தவபீட 3ஆம் வருட மாணவி), பிரகாஷ், சத்தியா, லவன், சுயானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.தங்கவடிவேலு**
*(சிற்றி வெதுப்பக உரிமையாளர்)*

**தும்பளை,**
**பருத்தித்துறை.**

### ஆறுமுகம் நடராசா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டியை வசிப்பிட மாகவும் தற்போது வட்டுக்கோட்டையில் வசித்தவருமாகிய ஆறுமுகம் நடராசா ஆசாரியார் 21.07.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் ஆறுமுகம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும் ரவீந்திரன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜிதா, விஜிதா ஆகியோரின் மாமனாரும் தாருஜன், அபினயா, சாருகேசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.07.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் நவாலி வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி, வட்டு.தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

(62864)

தகவல்:
**சுரேஸ் (மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழா கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.
இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மறைமாவட்டக் குருமுதல்வரும், புனித பத்திரிசியார் கல்லூரி அதிபருமாகிய அருட்திரு.ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம், விசேட விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மற்றும் பழையமாணவர் சங்கத் தலைவர் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் அழைத்துவரப்படுவதையும், நூற்றாண்டு விழா கேக்கை யாழ்.ஆயர் கல்லூரி அதிபர் அருட்திருகே.ஜேம்ஸ் சிங்கராயருக்கு வழங்குவதையும், 25 (இருபத்தைந்து) ஆண்டுகளாகக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய அருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசத்துக்கு பழைய மாணவர் சங்கத் தலை வர் பேராசிரியர் பாலசுப்பிரமணியம் 'மறை ஞான வேந்தன்' என்னும் பட்டத்தை வழங்கி கௌரவிப்பதையும், கல்லூரி மாணவர்கள் கீதம் இசைப்பதையும் படங்களில் காணலாம்.

## இன்றும் நாளையும்

யாழ்ப்பாணம் ஜூலை 23
வண்ணார்பண்ணை இளைய தம்பி வித்தியாசாலை மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் வைபவம் இன்று காலை 8 மணிக்கு இடம் பெறும்.

வித்தியாலய அதிபர் எம்.செல்லையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் கலந்து கொள்வார். (1)

* * *

அராலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அரச காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கிய 23 பயனாளிகளுக்கும் 'ஜயபூமி' உறுதி வழங்கும் நிகழ்வு நாளை மு.ப. 10 மணிக்கு வேலவன் சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (1)

* * *

சர்வதேச கெயர் நிறுவனத் தின் யாழ். மாவட்ட எதிர்கால முன்னேற்றத்திற்கான உள்ளூர் ஆக்கங் களின் முன்னெடுத்தல் திட்டத்தின் (Lift Project) கீழ் பிரான்பற்று வயல் பாடசாலையின் ஒரு வருட செயல் திட்ட நிறைவு விழா நாளை பி.ப. 2 மணிக்கு சங்கானை விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வயல் பாடசாலை குழு தலைவர் நா.பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹற்றன் நஷனல் வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் சி.சுந்தரேஸ்வரன் கலந்துகொள்வார்.(1-135)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23
யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பால்சேகரிப்பு நிலையத்தன் 23ஆவது கிளை இருபாலை கிழக்கு, மடத்த டியில் இன்று திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு திறந்து வைக் கும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (1)

* * *

தூய பவுல் விசுவாச சமூக உடுவில் சத்தியபுரம் தொழில் பயிற்சி நிலையத்தில் தையல்ப் பயிற்சியை நிறைவு செய்த மாணவிகளின் பொருட் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

தொழில் பயிற்சி நிலையப் பொறுப்பாளர் தலைமையில் சத்தியபுரம் தூய பவுல் ஆலயத்தில் இடம் பெறும் இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் செல்வி மஞ்சுளாதேவி கலந்து கொள்வார். (1-86)

# அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு; விஷம்போல் நாளாந்தம் எகிறி வரும் விலைவாசிகள்

## இக்கட்டான நிலைக்குள் வசதிகுறைந்த குடும்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை23
யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

சங்கக் கடைகளிலும் பெரும்பாலான உணவுப் பொருள்களுக்கு பற்றாக்குறை தென்படுகின்றது.

தனியார் கடைகளில் உணவுப் பொருள்கள் கிடைத்தாலும் அவைகளின் விலைகள் கட்டுப்படியானவையாய் இல்லை.

ஒருநாள் குடும்பச் செலவை 100 ரூபாவுக்குள் அடக்கிவிடக் கூடியநிலையில் இருந்த மக்கள் இப்பொழுது தினம் 500 ரூபாய்க்கும் அதிகமாக குடும்பச் செலவுகளுக்கு தேவைப்படுகின்றது என்று கூறுகிறார்கள்.

உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு, விலையேற்றம் மட்டுமன்றி அன்றாடம் தேவைப்படும் எரி பொருள்கள், மரக்கறிகள் யாவும் உச்ச விலையில் விற்கப்படுகின்றன. முட்டை, இறைச்சி வகைகள் கிடைப்பது குறைவாக இருக்கும் அதேவேளை விலைகளும் பல மடங்கு அதிகரித்துவிட்டன. கோழி இறைச்சி கிலோ ஒன்று ஏறத்தாழ ஆயிரம் ரூபாய் விற்கின்றது. முட்டை ஒன்று 25 ரூபாய்க்கு குறைவாய் இல்லை.

மீன்களின் வரத்து குறைந்து விட்டது. கிடைப்பவையும் சாதாரண மக்களின் வருவாய்க்கு ஏற்ற விலையில் கிடைப்பதில்லை.

இம்மாதிரி நிலைமைகளால் பொதுமக்கள் பெரும் கஷ்டமான நிலையில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து எமது குருநகர் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்.

### பதுக்கல் செய்யும் வியாபாரிகள்

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்து வருவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். வியாபாரிகள் சிலவகை உணவுப் பொருள்களைப் பதுக்கி வைப்பதில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் ஒரு கிலோ நாட்டரிசி ரூபா 85 தொடக்கம் 110 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதேநேரத்தில் 10 கிலோ நாட்டரிசியைக் கொண்ட பைகள் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

இவை சில கடைகளில் ரூபா 850 ஆகவும் சில கடைகளில் ரூபா 1000 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

சீனி கிலோ 68 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் இதனை சகல கடைகளிலும் பெற்றுக்கொள்ள முடியாமலுள்ளது. இதே நேரத்தில் தரமான அரிசி கிராமப்புற வியாபாரிகளிடம் உள்ளபோதிலும் இதனை இவ்வியாபாரிகள் விற்பனை செய்யாமல் பதுக்கி வைத்து விலை கூடிய மேற்கூறிய அரிசி வகைகளையே பொதுமக்களுக்கு விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள் என்று கூறப்படுகின்றது.

யாழ்.நகரில் சன்லைட் ஒன்று ரூபா 30 தொடக்கம் 35 வரை பல்வேறு விலைகளில் நடைபாதை வியாபாரிகளாலும் யாழ்.நகர வர்த்தகர்களாலும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு கிலோ மஞ்சள் பருப்பு 110 ஆகவும் மீன்ரின் ஒவ்வொன்றும் 120 தொடக்கம் ரூபா 130 வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன என்கின்றார் அவர்.

### ப.நோ.கூ. கடைகளில் அத்தியாவசியப் பொருள்கள்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது என எமது கொக்குவில் நிருபர் கூறுகின்றார்.

குறிப்பாக, குத்தரிசி, மா, குழந்தைகளுக்கான பால் மா போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெற முடியாதுள்ளது - என்கிறார் அவர். அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கப்பட்டு கறுப்புச் சந்தையில் உயர்ந்த விலைகளுக்கு விற்கப்படுகின்றன.

கூட்டுறவுச் சங்கங்களில் விலை நிர்ணயம் செய்யப்பட்டு விற்கப்பட்டு வந்த ஒரு கிலோ குத்தரிசி கறுப்புச் சந்தையில் 120 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறான அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வால் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் வறுமைப்பட்ட மக்களுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த சமுர்த்தி நிவாரணமும் தற்போது வழங்குவதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-51-29)

# காட்டுவழியாகச் செல்லும் கதிர்காம பக்தர்கள் படையினரின் கடும் சோதனைக்குள்ளாகிறார்கள்

## வள்ளியம்மன் ஆற்றுப்பகுதியில் சல்லடைபோட்டுச் சோதனை

மட்டக்களப்பு, ஜூலை 23
வட-கிழக்கிலிருந்து கதிர்காமத்திற்கு காட்டினூடாகக் கால்நடையில் செல்லும் பக்தர்கள் மீது படையினர் கடும் சோதனையிலீடுபடுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

கதிர்காமத்தை நெருங்கும் வேளையில் வள்ளியம்மன் ஆற்றுப் பகுதியில் சல்லடைபோட்டுத் துருவித்துருவி சோதனையிடப்படுவதாகப் பக்தர்கள் கூறுகின்றனர்.

அங்கிருந்து கட்டகாமம் செல்லும் வழியில் அங்கு இரண்டு படிவங்கள் வழங்கப்பட்டு சகல விவரங்களும் பெறப்பட்டு 'வீசா' போன்று முத்திரை குத்தப்பட்டு மீண்டும் பக்தர்களிடம் அவை வழங்கப்படுகின்றன.

அதனிடையே பக்தர்கள் கொண்டு செல்லும் சகல பொருள்களும் துருவித்துருவி ஆராயப்படுகின்றன. கற்பூரப்பக்கட் கூட உடைத்துச் சோதனையிடப்படுகிறது.

அடையாள அட்டையைவிட ஏனைய பொருள்கள் மீது படையினரின் கவனம் கூடுதலாக செலுத்தப்படுகிறதெனப் பக்தர்கள் கூறுகின்றனர்.

பாலத்திலுள்ள சோதனைச் சாவடி காலை 8 மணிக்குத் திறக்கப்படுவதால் அங்கு ஆயிரக்கணக்கில் பக்தர்கள் அலைமோதுவதையும் இங்கு குறிப்பிடமுடியும். அங்கிருந்து கட்டகாமம் சோதனைச் சாவடியில் அடுத்தகட்ட பாரிய சோதனை இடம்பெறுகிறது.

சோதனை செய்யப்பட்டு ஒரு படிவம் பெறப்படுகிறது படிவமில்லாதவர்கள் கதிர்காமம் செல்ல அனுமதிமறுக்கப்படுகிறது. கதிர்காமத்திற்குள் பிரவேசிப்போர் ஒரு படிவத்துடன் செல்லமுடியும். பரி சோதிக்கப்பட்டது என அதில் முத்திரையிடப்படும்.

கல்முனையிலிருந்து சென்ற கந்தசாமி என்ற பக்தர் கூறுகையில், எம்மை அடியார்கள் என்று கிஞ்சித்தும் கவனிக்காமல் குற்றவாளியை 'செக்' பண்ணுவது போல் தீவிரமாகச் சோதனையிட்டனர். தொலைபேசி 'சிம்' மற்றும் 'கமரா பிளிம்' முதலியவற்றை கழற்றி பறித்தனர். வட-கிழக்கிலிருந்து இனிமேல் காட்டுப்பயணத்தை மேற்கொண்டு யாரும் வரக்கூடாது என்று எண்ணுகிறார்களோ தெரியாது.

கதிர்காமத்தில் கூட மோப்ப நாய்களை விட்டு சோதிக்கிறார்கள். நான் அங்குமொட்டையடித்து விட்டு இனிமேல் கதிர்காமத்திற்கு வருவதில்லையென முருகப்பெருமானிடம் கூறிவிட்டு வந்துள்ளேன் என விரக்தியாகக் கூறினார்.

இன்னுமொரு பெண் பக்தர் கூறுகையில் 'பாணமை மற்றும் உகந்தையில் ஆரம்பிக்கும் சோதனை வரும்போதும் இறக்கி ஏற்றுவது வரை தொடருகிறது. பெண்களே என்றும் கூட பண்பாகச் சோதிப்பதில்லை.

இனி தமிழச்சியாகப் பிறந்த யாராவது காட்டினூடாகக் கதிர்காமம் செல்வதை நினைத்துப் பார்க்கக்கூடாது. அந்தளவிற்கு அந்தரங்க சோதனையும் நடைபெறுகிறது. மொத்தத்தில் கதிர்காமமே வேண்டாம் என்றார் - அவர்.

(ப-288)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் வங்கியின் நடமாடும் சேவை

குடத்தனை, ஜூலை23
பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையினால் சேமிப்புக் கருமபீடம் ஒன்று வடமராட்சி கிழக்கில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள பிரதேசங்களான குடத்தனை, அம்பன், மணற்காடு, பொற்பதி, நடுக்குடத்தனை, விளாங்காடு ஆகிய இடங்களில் வசிக்கும் மக்களின் நன்மைகருதி குடத்தனை மேற்கு சுடர்ஒளி சனசமூக நிலையத்தில் மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளையினரால் நடமாடும் கருமபீடம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பருத்தித்துறை மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ்.சிவனேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சிறிஸ்கந்தகுமார் சிறப்பு விருந்தினர் களாக வடபிராந்திய பொதுமுகாமையாளர் திருமதி எஸ்.சிவனருள் சுந்தரம், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் எஸ்.நடராஜா, பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் பசுபதி, வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.குகதாசன், குடத்தனை, அம்பன் கிராமசேவை யாளர் தர்மகுலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குடத்தனை மேற்கைச் சேர்ந்த சுரேஸ்குமார் கலைமதி முதலாவதாக கணக்கை ஆரம்பித்து வைத்தார். இவரிடம் இருந்து பணத்தையும், படிவங்களையும் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் திருமதி எஸ்.சிவனருள் சுந்தரம் பெற்றுக் கொண்டார்.

பருத்தித்துறை மக்கள் வங்கியினால் இது இரண்டாவது கருமபீடமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

## சுந்தரர் குருபூசை

நவாலி, ஜூலை 23
ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தினர் இன்று காலை 8 மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசா லையில் சுந்தர மூர்த்தி நாயனார்குருபூசையைக் கொண்டாடவுள்ளனர். (1-100)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை23
தொல்புரம், சுழிபுரத்திலுள்ள சிவபூமி முதியயோர் இல்லத்தில் இன்று பி.ப. 3 மணிக்கு சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை நடை பெறும்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் சொற்பொழிவும் வட்டு. இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடை பெறும்.

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23
இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு இன்று மதியம் 12 மணிக்கு சைவ வித்தியாவிருத்திச்சங்க அறநெறிப்பாடசாலையில் இடம் பெறும்.

வலிகாமம் அபிவிருத்தி உதவியாளர் த.பிரகதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தம்பதிகள் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வர்.

சைவப்புலவர் கந்தசத்தியதாசனின் சிறப்புச் சொற்பொழிவு, சுந்தரர் குருபூசையை ஒட்டி நடத்தப்பட்ட குறு வினாப்போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில வழங்கல் ஆகியன இடம் பெறும். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CD கள் மூலம் Spoken English

வீட்டில் இருந்தவாறே ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ள சகல அடிப்படை பாடத்திட்டங்களும் பயிற்சிகளும் இலகுவான முறையில் தமிழ்மொழி மூலம் 4 ACDகள் + 20 VCD களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வேலையை எதிர்பார்ப்போர், வீட்டில் இருக்கும் பெண்கள், ஆங்கில வகுப்புக்குச் செல்ல கூச்சப்படும் வயது வந்தோர் ஆகியோருக்கு மிகவும் உகந்தவை. ஆங்கில ஆசிரியர் களுக்கும் வழிகாட்டியாக அமையும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கற்பிக்கலாம். குடும்பமாகவும் ஆங்கிலம் பேச கற்றுக்கொள்ளலாம். முயற்சி உடையவர்கள் இதன்மூலம் நிச்சயமாக ஆங்கிலம் பேசக் கற்றுக்கொள்ளலாம்.

முன்பதிவுகள் செய்து கொள்வதன் மூலமே பெற்றுக்கொள்ள முடியும்

*முன்பதிவுகள் நடைபெறுகின்றன. முன்பதிவுசெய்யும் இடங்கள*

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை<br>பஸ் நிலையம்,<br>யாழ்ப்பாணம். | கத்தோலிக்க விற்பனை நிலையம் (பஸ்தியன் சந்தி)<br>360, பிரதான வீதி,<br>யாழ்ப்பாணம். 021 222 9041 |
| காருண்யா வைத்திய நிலையம்<br>சிவன் பண்ணை வீதி,<br>யாழ்ப்பாணம். 021 2223795 | காவேரி பார்மசி<br>கொக்குவில் சந்தி,<br>கொக்குவில். |
| ராஜலஷ்மி மலிரி பலஸ்<br>நெல்லியடி, கரவெட்டி.<br>(பஸ் நிலையத்திற்கு முன்னால்) | மெடிலான்ட் பார்மசி<br>ஆலடி சந்தி, மானிப்பாய். |
| ரேனி மூக்கு கண்ணாடி அகம்<br>கண்டி றோட், (AGA's Office அருகில்) சாவகச்சேரி. | Thurka Book shop<br>Bus stand, Chunnagam.<br>021 222 6267 |
| ரேனி மூக்கு கண்ணாடி அகம்<br>88, பிரதான வீதி,<br>பருத்தித்துறை. | மெடிலான்ட் பார்மசி<br>பிரதான வீதி, சங்கானை. |

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



*அன்னை மடியில்* 13 - 07 - 2001

*ஆண்டவன் மடியில்* 23 - 07 - 2006

**சுரேஸ் சிரோமியா**

*ஆண்டொன்று ஆனதே*
*ஆறாத் துயரில் நாம் ஆமிழ்ந்து*
*இரக்கத்தின் இறைவா*
*இப்பூவுலகில் ஒரே கருவறையில்*
*கருத்தரித்தோம்*
*இன்று காணவில்லை என்று கதறி*
*துடிக்கிறேன் அக்கா*
*இவரின் ஆன்மாவின் நித்திய*
*பேரின்பத்திற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

என்றும் உன் நினைவுகளுடன்
கபில்சன் (தம்பி), அப்பம்மா, சித்தப்பாமார்.

31, சோமசுந்தரம் வீதி,
யாழ்ப்பாணம். (62758)

## காசாளர் தேவை (கெஷியர்)

நாணயமான, சிறந்த கையெழுத்து, முன் அனுபவமுடைய காசாளர் தேவை. தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.

*0716357267.*

(62855)

## கண்ணீர் அஞ்சலி

வடக்கு மாகாண பிரதம செயலாளர்
*சி.ரங்கராஜா* அவர்களின்
அன்புத் தாய்
திருமதி
**சிவகுருநாதன் ரோகினி அம்மா**
கடந்த 13-07-2007 அன்று
காலமானதையிட்டு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பி/உள்ளூராட்சி**
**உதவி ஆணையாளரும்,**
**பணியாளர்களும்,**
**யாழ்ப்பாணம்.**

(62820)

## மரண அறிவித்தல்

**சுந்தரமூர்த்தி குணசீலன் (குணம்)**



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி குணசீலன் (16.07.2007) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் யாழினியின் அன்புக் கணவரும் டிக்ஷன், டிலக்ஷினி, டிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி - மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சத்துருசிங்கம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பத்மசீலன் (சீலா), சத்தியசீலன் (ராசன்), ஜெயசீலன் (கிளி), மணிலால்தேவி (மணி), சாந்தினி(சாந்தா), சுகந்தினி(சுதா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25-07-2007) புதன்கிழமை ஜேர்மனி யில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சு.மகேஸ்வரி
*(தாய்).*

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (62856)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து நந்தாவில் அம்மன் வீதி ஆரம்பத்தில் 4 பரப்புக்காணியுடன் வீடு மற்றும் தனிக்கிணறு, வளவு வருமானத்துடன் விற்பனைக்குண்டு.

*27, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (T/52990)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

900 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம் **06 09 22 53**

**20-07-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5055901 - 5070728

ஜக்பொட் பரிசு ரூபா. 1,743,050/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 314,083 | 10/- | 3,140,830/- |
| 2 இலக்கங்கள் | 28,830 | 20/- | 576,600/- |
| 1 இல. + லக்கினம் | 28,507 | 30/- | 855,210/- |
| 2 இல. + லக்கினம் | 2,639 | 100/- | 263,900/- |
| 3 இலக்கங்கள் | 769 | 500/- | 384,500/- |
| 3 இல. + லக்கினம் | 67 | 5,000/- | 335,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,743,050/- | 1,743,050/- |
| மொத்தம் | | | 7,599,090/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 374,904 | | 8,622,590/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல.4181660 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஜூலை மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.


அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 5057070-4-67 |
| மாத்தறை | 5057751-1-76 |
| கம்பஹா | 5069958-1-82 |
| பொலன்னறுவை | 5056458-3-98 |
| கொழும்பு | 5065275-3-59 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## ஓராண்டு நினைவு நாள்



அன்னை மடியில்
13 - 05 - 1942

ஆண்டவன் அடியில்
18 - 07 - 2006

திருமதி
**செல்லம்மா கணேசலிங்கம்**
திதி : நவமி

வேலணையில் பூத்த
வெண்தாமரையே
அருமை அம்மாவே !
உன் அரவணைப்பால்
உயர்வாய் வளர்ந்தோமே
உனைப் பிரிந்து ஓராண்டு ஆனது
உன் நினைவு எம் நெஞ்சில்
உறங்கி வாழுதம்மா.

(62849)

*உங்கள் பிரிவுடன்*
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
*(மாலன் களஞ்சியம்).*

*அரசடி வீதி,*
*இல.11, திருவள்ளுவர் லேன், கந்தர்மடம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) ப் பரீட்சை, ஓகஸ்ட் 2007
## இணைந்த கணிதம்.

01)i) $\lambda \in IR$ எனவும் $f(x) = x^2 + (\lambda - 2)x + 2\lambda + 1$ எனவும் கொள்வோம்.

(a) $f(x) = 0$ எனும் சமன்பாடு

i) பொருந்தும் மூலங்களை

ii) மெய் மூலங்களை கொண்டிருப்பதற்கு $\lambda$ இன் பெறுமான வீச்சுக்களைக் காண்க.

(b) x இன் எல்லா மெய்ப் பெறுமானங்களிற்கும் f (x) ஆனது நேராக இருப்பதற்குரிய $\lambda$ இன் பெறுமான வீச்சைத் தருக.

(c) $\lambda = 1$ ஆகும் போது $\frac{1}{f(x)}$ இன் அதியுயர் பெறுமானத்தைக் காண்க.

இது x இன் எப்பெறுமானத்தின் போது நிகழும்.

ii) $x^2 - (p-1)^2 x + 4p^2 = 0$ என்னும் சமன்பாட்டின் மூலங்கள் $\lambda^2$, $\mu^2$ ஆகும். இங்கு $\lambda, \mu, p$ நேரெண்கள் $\lambda, \mu$ என்பவற்றை மூலங்களாகக் கொண்ட இருபடிச் சமன்பாட்டைப் பெறுக.

02)a) ஒரு சார்பு f(x) ஆனது $5x^3 - px^2 + x - q$ ஆல் வரையறுக்கப்படுகிறது. f(x) ஆனது $(x-2)$ ஆல் வகுபடும் போது மீதி 3 ஐத் தருகிறது. f(x) இன் ஒருகாரணி (x-1) ஆகும்.

i) p, q ஐக் காண்க.

ii) f(x) ஐ $(x-1)^2$ ஆல் வகுக்கும் போது பெறப்படும் மீதியைக் காண்க.

b) a, b என்பன நேர்மெய் எண்கள் எனின்,

$$log_a b = \frac{1}{log_b a}$$ எனக் காட்டுக.

$x^2 + y^2 = z^2$ ஆயின் $\frac{1}{log_{y+z} x} + \frac{1}{log_{z-y} x} = 2$ எனக் காட்டுக.

c) p இரட்டை எண் எனின் எனின் மட்டும் $p^2$ இரட்டை எண் ஆகும். எனக் காட்டுக.

03)a) 8 அதிபர்கள் 15 ஆசிரியர்கள் கொண்ட கூட்டத்திலிருந்து 3 அதிபர்கள் 3 ஆசிரியர்கள் கொண்ட எத்தனை கூட்டங்கள் அமைக்கலாம்.

மேலும் இவற்றுள் எத்தனைக் கூட்டங்களுள்,

i) அதிபர் திரு x என்பவர் அமைவார்?

ii) அதிபர் திரு x என்பவர் அமையமாட்டார்?

iii) அதிபர் திரு x உம் ஆசிரியர் திரு y, உம் அமைவார்கள்?

b) $(1+x)^n = C_0 + C_1 x + C_2 x^2 + \text{-----------} + C_n x^n$ எனின்,

i) $\sum_{k=0}^{n} {}^nC_k = 2^n$ எனவும்

ii) $\sum_{k=0}^{n} K\, {}^nC_k = n.2^{n-1}$ எனவும் காட்டுக.

பகுதி (i), பகுதி (ii) இல் பெற்ற முடிபினையும் பயன்படுத்தி, $a_1, a_2, a_3$ ---------- $a_{n+1}$ என்பன கூட்டல் விருத்தியில் அமையின்,

$$\sum_{k=0}^{n} {}^nC_k\, a_{k+1} = 2^{n-1}(a_1 + a_{n+1})$$ எனக் காட்டுக.

04)a) கணிதத் தொகுத்தறி முறையால்.

$2.1 + 3.2 + 4.2^2 + 5.2^3 +$ ---------- எனும் தொடரின் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை $n.2^n$ இற்குச் சமம் எனக் காட்டுக.

b) $a_r, b_r$ என்பன $U_r = a_r \pm b_r$ ஆகுமாறு இருப்பின் $\sum_{r=1}^{n} U_r = \sum_{r=1}^{n} a_r \pm \sum_{r=1}^{n} b_r$ ஆகும்.

$U_r = \frac{2^r - 1}{3^{r+1}}$ எனின் $\sum_{r=1}^{n} U_r = \frac{1}{2} - \frac{2}{3}\left(\frac{2}{3}\right)^n + \frac{1}{6}\left(\frac{1}{3}\right)^n$ என நிறுவுக.

c) $f(r) = \frac{1}{r^2}$ உம், r நேர்நிறையெண்ணும் எனின் $f(r) - f(r+1)$ ஐ மிக எளிய வடிவில் தருக.

இதிலிருந்து $\sum_{r=n}^{4n} \left[\frac{2r+1}{r^2(r+1)^2}\right] = \frac{(3n+1)(5n+1)}{n^2(4n+1)^2}$ எனக் காட்டுக.

05)a) பெறுமானம் காண்க.

i) $\lim_{x \to 4} \frac{3 - \sqrt{5+x}}{1 - \sqrt{5-x}}$

ii) $\lim_{x \to \frac{\pi}{4}} (1 - \tan x) Sec 2x$

b) $x^2 + y^2 = 2y$ ஆகும்.

i) $\frac{dy}{dx} = \frac{x}{1-y}$ என நிறுவுக.

ii) $\frac{d^2y}{dx^2} = \frac{1}{(1-y)^3}$ என நிறுவுக.

iii) $x = 0$ ஆக $\frac{d^2y}{dx^2}$ இனைக் காண்க.

c) $y = Cos^{-1}\left(\frac{x - x^{-1}}{x + x^{-1}}\right)$ எனின் $y = 2Cot^{-1} x$ எனக் காட்டுக.

இதிலிருந்து $\frac{dy}{dx}$ இனைக் காண்க.

06)a) $x > 0$ எனின் $x - \ln(1+x) > \frac{\frac{1}{2}x^2}{1+x}$ எனக் காட்டுக.

b) $y = (x-1)^2(x+1)$ எனத் தரப்பட்டிருப்பின், $\frac{dy}{dx} = 0$ ஆக இருக்கும் x இன் பெறுமானங்களைக் காண்க.

yயின் அந்நிலையான பெறுமானங்களின் இயல்பை முதற்பெறுதியின் நடத்தையை மாத்திரம் கருத்திற்கொண்டு ஆராய்க.

வளையி $y = (x-1)^2(x+1)$ ஐப் பரும்படியாக வரைக.

c) தரப்பட்ட பரப்பளவு $a^2$ ஆகவுடைய கடதாசி அட்டையைக் கொண்டு ஒரு திறந்த பெட்டி ஆக்கப்படுகின்றது. அப்பெட்டியின் அடி சதுரமாகவுள்ளது. அப்பெட்டியின் உயர்கனவளவு $\frac{a^3}{6\sqrt{3}}$ எனக் காட்டுக.

07)a) தக்க பிரதியீட்டைப் பயன்படுத்தி தொகையீடு $\int_0^1 \sqrt{\frac{1-x}{x}}\,dx$ இன் பெறுமானத்தைக் காண்க.

இதிலிருந்து $\int_0^1 x\sqrt{\frac{1-x^2}{x^2}}\,dx$ இன் பெறுமானத்தை உய்த்தறிக.

b) பகுதிகளாகத் தொகையிடும் முறையைப் பயன்படுத்தி, தொகையீடு $\int_0^1 \tan^{-1} x\,dx$ இன் பெறுமானத்தைக் காண்க.

c) $\frac{3x-2}{x^3 - x^2}$ ஐப் பகுதிப்பின்னமாக எழுதுக.

இதிலிருந்து $\int_2^3 \frac{3x-2}{x^3 - x^2}\,dx = \ln\left(\frac{4}{3}\right) + \frac{1}{3}$ எனக் காட்டுக.

08) முக்கோணிகள் தொடர்பான சைன்விதி, கோசைன்விதியை வழமையான குறியீட்டில் தருக?

i) யாதாயினும் முக்கோணம் ABC இற்கு வழக்கமான குறியீடுகளில் $Sin(B-C) = \left(\frac{b^2 - c^2}{a^2}\right) Sin A$ என நிறுவுக.

இதிலிருந்து $aSin(B-C) + bSin(C-A) + cSin(A-B) = 0$ என்பதை உய்த்தறிக.

ii) $\tan\left(\frac{A-B}{2}\right) = \left(\frac{a-b}{a+b}\right) Cot \frac{c}{2}$ என நிறுவுக.

இதிலிருந்து $\Delta$ ABC இல் $a = 5, b = 4$, $Cos(A-B)\frac{31}{32}$ எனின் Cos c இனைக் கண்டு $c = 6$ எனக் காட்டுக.

iii) $\Delta ABC$ இன் பரப்பு $\Delta = a^2 - (b-c)^2$ இனால் தரப்படுகிறது.

$\tan A = 8/15$ எனக் காட்டுக.

09)i) $Cot\theta - \tan\theta - 2\tan 2\theta - 4\tan 4\theta = 8Cot 8\theta$ எனக் காட்டுக.

ii) பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க.

a) $Sin^{-1}x + Sin^{-1}(1-x) = Cos^{-1}x$

b) $\sqrt{1 + Sin 8x} = Cos 4x$

iii) $5Cos\theta + 3Cos(\theta + 60)$ இனை $A\,Cos(\theta + \alpha)$ எனும் வடிவில் உணர்த்துக.

இதிலிருந்து $5Cos\theta + 3Cos(\theta + 60)$ ஆனது 7 இற்கும் -7 இற்கும் இடையில் கிடக்குமெனக் காட்டுக.

iv) $a\,Cos 2\theta + b\,Sin 2\theta = c$ இன் தீர்வுகள் $\alpha, \beta$ எனின், பின்வருவனவற்றை நிறுவுக.

a) $\tan\alpha + \tan\beta = \frac{2b}{a+c}$

b) $\tan\alpha \tan\beta = \frac{c-a}{c+a}$

c) $\tan(\alpha + \beta) = b/a$

# கல்விப் பொது தராதரப் பத்திர (உ/த) ப் பரீட்சை, ஓகஸ்ட் 2007
## இரசாயனவியல்

### பகுதி-A அமைப்புக்கட்டுரை.

01.a) A,B,C,D,E ஆகிய ஐந்து வித்தியாசமான உலோகங்கள் தொடர்பான கற்றல் ஒரு வகுப்பறையில் நிகழ்ந்தது. அங்கு சில பரிசோதனைகள் ஆசிரியர்களால் மேற்கொள்ளப் பட்டன. சில பரிசோதனைகள் மாணவர்களால் செய்யப்பட்டன. பரிசோதனைப் பெறு பேறுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| உலோகம். | வளியில் வெப்பம் ஏற்றப்பட்டபோது. | குளிர்நீருடன் தாக்கம். | நீராவியுடன் தாக்கம். | ஐதான அமிலத்துடன் தாக்கம். |
|---|---|---|---|---|
| A | எளிதில் நிகழவில்லை. மேற்பரப்பில் ஒட்சைட் தோன்றியது. | தாக்கம் இல்லை. | மெதுவான தாக்கம். | மெதுவான தாக்கம். |
| B | தாக்கம் இல்லை. | தாக்கம் இல்லை. | தாக்கம் இல்லை. | தாக்கம் இல்லை. |
| C | உக்கிரமாக எரிந்தது. ஒட்சைட் தோன்றியது. | ஐதரசன்குமிழ் விரை வாகத் தோன்றியது. | தாக்கம் மேற்கொள்ளப் படவில்லை. | தாக்கம் மேற்கொள்ளப் படவில்லை. |
| D | எரியவில்லை. மேற் பரப்பில் ஒட்சைட் தோன்றியது. | தாக்கம் இல்லை. | தாக்கம் இல்லை. | தாக்கம் இல்லை. |
| E | விரைவாக எரிந்து ஒட்சைட் தோன்றியது. | உலோக மேற்பரப்பில் வாயுக்குமிழ்கள் சில தோன்றின. | உக்கிரமான தாக்கம். ஐதரசனும் ஒட்சைட்டும் | விரைவாகக் கரைந்து ஐதரசன் தோன்றியது. |

i) மேலேயுள்ள பரிசோதனைப் பெறுபேறுகளை உபயோகித்து A,B,C,D,E ஆகிய உலோகங்களைத் தாக்குதிறன் ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்துக.

ii) நீராவி, அமிலம் என்பவற்றுடன் உலோகம் C இன் தாக்கம் ஏன் மேற்கொள்ளப் படவில்லை?

iii) பாட இறுதியில் அவ்வைந்து உலோகங்களும் Ca,Cu,Au,Fe,Mg என ஆசிரியர் கூறினார். இதிலிருந்து உலோகங்கள் A,B,C,D,E ஐ இனங்காண்க.

b) (ஒரு புரோத்தனை மட்டும் கொண்டது. இலத்திரன்கள் இல்லை.)

i) A ஐ இனங்காண்க.

ii) $XH_3$ இற்கும் A இற்கும் இடையில் பிணைப்பு உருவாகும் சாத்தியம் உண்டா?

iii) உமதுவிடை ''இல்லை'' எனின் அதற்கான காரணம் யாது?/ ''ஆம்'' எனின் உருவாகும் பிணைப்பு வகையைக் குறிப்பிடுக.

iv) X இற்கு மிகப்பொருத்தமான மூலகத்தின் பெயரினைக் குறிப்பிடுக.

c) பின்வருவனவற்றின் IUPAC பெயர்களைத் தருக.

i) $CrO_2Cl_2$

ii) $(FeCl_2(H_2O)_4)\,Cl$

iii) $K(AgF_2)$


d) ஆய்வுசாலையில் செறிந்த $H_2SO_4$ பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தவறுதலாகச் செறிந்த அமிலம் உமது உடலில் படுமாயின் உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக் கையைக் குறிப்பிடுக.

02.a) பொட்டாசியம் மங்கனேற்று (vii) இனால் இரசம் ஒட்சியேற்றத்திற்கு உள்ளாகி மங்கனீசு (iv) ஒட்சைட்டும் பொட்டாசியம் ஐதரொட்சைட்டும் தோன்றின. $50.0 cm^3$ 0.0200 mol $dm^3$ பொட்டாசியம் மங்கனேற்று () கரைசல் 0.600 இரசத்தை ஒட்சியேற்றியது. இத்தாக்கத் திற்கான சமப்படுத்திய சமன்பாட்டைக் குறிப்பிடுக. (Hg-200.59)

b) பெரசு ஒட்சலேற்று $Ce^{3+}(aq)$ ஐ $Ce^{2+}$ ஆகத் தாழ்த்துகின்றது. இத்தாக்கத்தின் தாழ்த்தும் கருவியின் சமப்படுத்திய அரை அயன் சமன்பாட்டைத் தருக.

c) a) இலட்சியக் கரைசல்களுக்குரிய இரவோற்றின் விதியைக் கூறுக.

b)



A,B எனும் கலக்கும் தகவுள்ள திரவங்களின் கரைசலின் கொதிநிலை-மூல்பின்ன வரைபு மேலே தரப்பட்டுள்ளது.

i) மேற்படி கரைசல் இரவோற்றின் விதியிலிருந்து எவ்வாறான விலகலைக் காட்டும்?

ii) M இனால் குறிப்பிடப்படும் கரைசலின் கொதிநிலை பற்றி யாது கூறுவீர்?

iii) இதனைக் காய்ச்சி வடிக்கும்போது எவ்வாறான விளைவை எதிர்பார்ப்பீர்?

c) X இனால் கரைசலைக் காய்ச்சி வடிக்கும் போது தூயA, தூயB பெறப்படுமா என்பதைச் சுருக்கமாக விளக்குக.

d) மேற்படி தொகுதிக்குப் பொருத்தமான இரு உதாரணங்கள் தருக.

e) இச்சேர்வையை நீர்ப்பகுப்பிற்கு உள்ளாக்கும் போது பெறப்படும் விளைவுகளைத் தருக.

03.a) ஒரு சேதனச் சேர்வை A 40% C ஐயும் 6.7% H ஐயும் கொண்டுள்ளது. மிகுதி ஒட்சிசன். இதன் சார்மூலக்கூற்றுத் திணிவு 30. செறிந்த KOH கரைசலுடன் தாக்கமுற விடப்பட்ட போது B,C எனும் இரு சேர்வைகள் பெறப்பட்டன. B ஐ ஒட்சியேற்றிய போது ஆரம்பச் சேர்வை A பெறப்பட்டது. Cஐ concHCl உடன் தாக்கமுற விட்டபோது சேர்வை D பெறப்பட்டது. D பின்வரும் பரிசோதனைகளுக்கு விடையளித்தது.

| செய்முறை | அவதானம். |
|---|---|
| 1. தொலனின் சோதனைப்பொருள் சேர்க்கப்பட்டது. | வெள்ளி ஆடி பெறப்பட்டது. |
| 2. கார $NaHCO_3$ கரைசல் சேர்க்கப்பட்டது. | $CO_2$ வாயுக்குமிழ்கள் வெளியேறின. |

A,B,C,D இற்கான கட்டமைப்புக்களைத் தந்து தாக்கங்களைத் தருக.

b) $CH_3Br$ இற்கும் $OH^-$ இற்கும் இடையிலான தாக்கப்பொறிமுறை தொடர்பான வினா கீழே தரப்பட்டுள்ளது.

i) இடைநிலை விளைவு X ஐத் தருக.

ii) Y இன் கட்டமைப்பைத் தருக.

iii) கருதாடியைத் தருக.

iv) இத்தாக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?

v) தாக்கவீதச் சமன்பாட்டைத் தருக.

c) செயற்கை முறையில் தயாரிக்கப்படும் இனிப்புப் பதார்த்தத்தில் உள்ள சேர்வை கீழே தரப்பட்டுள்ளது.


O $CH_2C_6H_5$
$H_2NCH$-C-NH-CH-$COOCH_3$
$CH_2COOH$

i) இச்சேர்வையில் உள்ள தொழிற்படும் கூட்டங்களைத் தருக.

ii) இச்சேர்வை அயன் நிலையில் காணப்படக்கூடியது. அவ்வயனின் கட்டமைப்பைத் தருக.

iii) இச்சேர்வையை நீர்ப்பகுப்பிற்கு உள்ளாக்கும் போது பெறப்படும் விளைவுகளைத் தருக.

04.a) காபன்சேர்வை ஒன்றின் பிணைப்புக்களின் உருவாக்கம் கீழே காட்டப்பட்டுள்ளது.



i) ஒபிற்றல்களைக் குறிக்க.

ii) பிணைப்புக்களைத் தருக.

iii) பிணைப்புக்கள் எவ் ஒபிற்றல்களின் மேற்பொருந்துகையால் உருவாகின்றன எனத் தருக.


iv) $\pi$ பிணைப்பு/பிணைப்புகளைத் தருக.

v) $\pi$ பிணைப்பு/பிணைப்புகள் எவ் ஒபிற்றல்களின் மேற்பொருந்துகையால் உருவாகின்றன எனத் தருக.

b) பின்வரும் மாற்றீடுகளை எவ்வாறு நிகழ்த்துவீர் எனத் தருக.


i) $HC \equiv CH \rightarrow C_2H_5OOH$ (4 படிகளுக்கு மேலாகவும் 7 படிகளுக்குக் குறைவாகவும்)

ii)




(5 படிகளுக்கு மேலாகவும் 7 படிகளுக்குக் குறைவாகவும்)

iii)



c) பின்வரும் சேர்வையின் IUPAC பெயரைத் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிப் பாதசரம்

(நேற்றைய சிறுகதையின் தொடர்ச்சி...)

செல்லையா நாணயக் கயிற்றை இளக்கிவிட்டு, மாட்டின் கால்களுக்கிடையில் தன் காலை வைத்தான். ரோசம் மிகுந்த அந்த இளம் காளை உன்மத்தம் கொண்டதுபோல் ஏற்காலை தன் ஏரியில் பட்டும் படாமலும் தாங்கிக் கொண்டு பறந்தது.... ஆத்திரத்தில் சிந்தனையில்லாமல் கூறிய வார்த்தைக்கு இவ்வளவு கோபமா? நிலத்தில் வியர்வை சொட்ட கை, கால் வலியினால் செயலற்றுப் போக, புகையிலைத் தோட்டத்தைக் கிண்டிப் பாடுபட்டவனுக்குத்தான் காசின் அருமை தெரியும்! அவன் ஆண் பிள்ளை. இரண்டு வார்த்தை பேச உரிமையுண்டு. அதைப் பெண்பொறுத்துக்கொண்டால் என்ன? கொண்டுவந்த காசெல்லாம் அவளுக்குத்தானே செலவு செய்தான்....? தனக்கு ஒரு சுருட்டுக்கூட வாங்கிக் கொள்ளவில்லையே.....

கால்களை வண்டியின் பின்புறம் தொங்கப் போட்டுக் கொண்டு, வண்டியின் கீழ் ஓடும் தெருவைப் பார்த்தபடி நல்லம்மா சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எவ்வளவு அற்ப காரியம்!

ஒரு கஷ்டமும் இல்லாமல் திருவிழாப் பார்த்துவிட்டு சந் தோஷமாக வந்திருக்கலாமே, எல்லாம் அவளுடைய பிழை தான். கணவன் இரண்டு வார்த்தைகள் கடுமையாகச் சொல்லி விட்டால்தான் என்ன?

மாடுகளைப்பினால் பலமாக மூச்சு வாங்கியது. நெல்லியடிச் சந்தியில், ஒரு பூவரச மரத்தின் கீழ் செல்லையா வண்டியை நிற்பாட்டினான். அந்த நடுயாமத்திலும் கோயிலுக்குப் போகிறவர்களுக்காக கடைகள் எல்லாம் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சந்தையில் இரண்டு பெண்கள் அப்பம் சுட்டுக் கொண்டிருந்தனர். தேநீர் கடைகளில் தேநீர் கலக்கும் 'கடகட' என்ற சத்தத்தை விட மற்றெங்கும் ஆழ்ந்த நிசப் தம் குடிகொண்டிருந் தது.

செல்லையா மாட்டின் களை தீர அதைத் தடவிக் கொடுத்த பின், ஒரு தேநீர் கடை இருந்த பக்கமாகச் சென்றான். அவனுடைய மடியில் ஒரு ஐந்து சதம்தான் இருந்ததென்பது நல்லம்மாவுக்குத் தெரியும். அன்று மத்தியானம் வீட்டில் சாப்பிட்டது தான். அதன்பிறகு ஒன்றுமே இல்லை.... 'ஐயோ அவருக்கு எவ்வளவு பசியாயிருக்கும், வாய் திறந்து ஒன்றும் சொல்லாமல் இருக்கிறாரே...' என்று அவள் அங்கலாய்த்தாள். அவளுடைய இதயம் இளகிக் கரைந்தது. தன் கணவனுடைய மனதின் பண்பும், அவன் தன்பால் வைத்துள்ள அன்பின் ஆழமும் அவள் மனதில் தெளிவாயிற்று. விவாகம் செய்து கொண்ட புதிதில் ஒருநாள் அவன் கூறிய வசனம் ஒன்றை அவள் ஞாபகப்படுத்தி கொண்டாள். ''பெட்டை உனக்காக வேணுமெண்டால் என்ரை உயிரையும் கொடுத்து விடுவேன். நீ ஒண்டுக்கும் பயப்படவேண்டாம்''

அவளுடைய நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று உடைவது போல் இருந்தது. கண்கள் பொருமி உவர்நீரைப் பொழிந்தன. தன் கணவனை ஒரு குழந்தைபோல் மடியில் வைத்துத் தாலாட்டி அவனுடைய உடலின் ஆயாசத்தையும் மனக்கவலையையும் போக்கவேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது.

செல்லையா வாயில் ஒரு சுருட்டுடன் வந்து மனைவியருகில் ஒரு வெற்றிலை பாக்குச் சுருளை வைத்துவிட்டு, அவளுடைய முகத்தைப் பார்த்தாள்.... அவளுடைய கண்ணீர் தோய்ந்த முகத்தின் ஒளி அவனை உலுக்கியது. தன்னுடைய நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையால் அவளுடைய கண்ணீரை துடைக்கவேண்டும் என்று மனம் அவாவியது.

''என்ன நல்லம்.....''

நல்லம்மாவின் கண்ணீர் வடிந்த முகத்தில், நாணம் கலந்த ஒரு புன்னகை அரும்பியது.'' ஒண்டுமில்லை, உங்களுக்குப் பசி இல்லையோ? வெளிக்கிடுங்கோவென் கெதியாய் வீட்டை போவம்''

செல்லையா அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டான். மாட்டின் வெண்டயம் மறுபடியும் பனந்தோப்புக்களில் எதிரொலித்தது.

வல்லைவெளி!

இந்த அகன்ற பூமிப்பரப்பின் மகிமையை அறிந்தது போல இதுகாறும் வேகமாய் ஓடிவந்த மாடு, தன் கதியைக் குறைத்து அடிக்குமேல் அடி எடுத்து வைக்க ஆரம்பித்தது.

பேய்க்காற்று 'ஹே' என்று சுழன்றடித் தது.

வானம் கவிந்தது, நாற்புறமும் நிலத்தைக் கவ்வியக் கொண்டிருந்தது. வெளியின் நடுவே தேங்கி நின்ற நீரோடை, ஒரு அரக்கனது பிரமாண்டமான மார்பில் அணியப்பட்ட மரகதச்சரடு போல் ஜ்வலித் தது. வானமுகட்டின் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த பளிங்குத்தகடு போன்ற சந்திரதீபம் கீழே விழுந்துவிட எத்தனிப்பது போலக் கனிந்து பிரகாசித்தது.

சின்ன மனிதர்களையும் பெரிய எண்ணங்கள் எண்ணும் படி தூண்டும் இந்த வெளிப் பிரதேசத்தில்தான் மனிதனின் ஜீவநாடி நவநாகரிக முறைகளினால் நலிந்துபடாமல் இன்னும் அந்தப் பழைய வேகத்தோடு அடித்துக் கொண்டிருக்கிறது.

எங்கோ வெகுதொலைவில் நிலத்தில் இருந்து இரண்டு அடி உயரத்தில் பொட்டிட்டது போன்ற ஒரு ஒளி தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெருவை நோக்கி நகர்ந்து வந்தது.... செல்லையா அதைக் கண்டதும் அதை நோக்கிக் காறி உமிழ்ந்தான். நல்லம்மா ''அது என்ன?'' என்று கேட் டாள்.

''ஆரோ மீன்பிடிகாரர் சூழ் கொண்டு போறாங்கள்'' என்று ஒரு பொய் சொல்லி மழுப்பிவிட்டுச் செல்லையா மாட்டின் வாலைப் பிடித்து முறுக்கினான்.

அந்த வெளிச்சம் தெருவைக் கடந்து வேகமாய் மற்றப் பக்கத்தில் போய் ''பக்'' என்று அவிந்தது....

செல்லையாவின் இடக்கை அவன் மனைவியின் இடையை நோக்கி நகர்ந்தது.

அவனுடைய மனம் வல்லைவெளி போல் விரிந்தது. மெய்மறந்த ஒரு மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது. தன் குரலை எழுப்பி, ''ஞான குமாரி'' என்ற தேவகாந்தாரி ராகப் பாட்டைப் பாடினான்.... அவனுக்குப் பசியில்லை, தாகம் இல்லை, தூக்கம் இல்லை. எத்தனை கொள்ளிவாய்ப் பிசாசுகள் சேர்ந்தும் அவனை என்ன செய்துவிடமுடியும்?

(முற்றும்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அன்னை மடியில் 27 ★ 01 ★ 1922

ஆண்டவன் அடியில் 23 ★ 06 ★ 2007

### திருமதி ஞானப்பிரகாசம் பாக்கியம்

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (23.07.2007) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''இரத்தின மஹால்'',
பிரதான வீதி,
சங்கானை. (62831)

பிரிவால் துயருறும்:
மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)


யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.Phone: 222 2567
சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

## விழிநீர் சொரிகின்றோம்

திருமதி
### மகேஸ்வரன் ஜெகதீஸ்வரி
(ஜெயந்தா)



*எம் ஆருயிர் நண்பனின் அன்பு மனைவியே*
*ஆண்டுகள் பல நீ வாழ்வாய் என*
*நாம் கனவுகள் பல கண்டோம்*
*சடுதியில் நீ மறைந்தது ஏனோ?*
*விழிநீர் சிந்தி அழுகின்றோம் தினமும் நாம்.*

எம் அன்பு நண்பனின் மனைவியினது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அர்ஷாத் டிஜிற்றல் வீடியோ,
கைதடி தெற்கு. (62858)

சந்திரன் ஜெயக்குமார் (Sc)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்
### தில்லையம்பலம் மகேந்திரராசா
(கணக்காய்வாளர், முன்னாள் பொதுச்செயலாளர், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)



தோற்றம்: 29 ★ 01 ★ 1945
மறைவு: 23 ★ 06 ★ 2007

எங்கள் குடும்பத் தலைவர் அமரத்துவம் அடைந்த செய்தியினை அறிந்து நேரில் வந்தும் தந்தி, தொலைபேசி, மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இரங்கல் உரை நிகழ்த்தியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், நேற்று 22.07.2007 முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்றன. இன்று (23.07.2007) திங்கட்கிழமை பம்பலப்பிட்டி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

183, Sri Rajaguru,
Srisubthi Road,
Wellawatha, Col. - 06. (ச/52997)

குடும்பத்தினர்.

## 43ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில் 28.01.1982

ஆண்டவன் அடியில் 11.06.2007

### திருமதி சியாமலி நிமல்க்கா காண்டீபன்

**கண்ணீரோடு ஒன்றரைத் திங்கள் கரைந்து மறைந்ததம்மா**
**அன்பான மனைவியாய் பாசமிகு அம்மாவாய்**
**நீர் வாழ்ந்த வாழ்க்கையின் இனிய சுவடுகள்**
**கனவாகிப் போன மாயம் என்ன?**

இன்று (23.07.2007) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கச்சாய் வடக்கு, கொடிகாமம். (62793)

குடும்பத்தினர்.

OFFICE SPACE AVAILABLE FOR RENT
Centrally located in the heart of Jaffna Town at Hospital Road. Ground floor two units 600 sq. ft. each. 1st and 2nd floor 2700 sq.ft. each. Parking space available.
1st floor is fully tiled and fitted with suspended ceiling and partitioned. Seven sound proof rooms with glass doors. AC and modern fittings.
Inquiries TP. No. 222 9196 (Office hours only)

## மரண அறிவித்தல்

### சிந்தாத்துரை பெனடிக்ற்



யாழ்ப்பாணம், பற்றிக்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் இராஜேந்திரா வீதியை வசிப் பிடமாகவும் கொண்ட சிந்தாத்துரை பெனடிக்ற் 22.07.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிந்தாத்துரை - மரியம்மா தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும் ரஞ்சிதராணியின் அன்புக் கணவரும் அலன் (BAHRAIN), றுபினா செறின், நிரேஷன் (ஆசிரியர், யா/அனலைதீவு சதாசிவ ம.வி., அனலைதீவு), விமல் கொன்ஸ்ரன்ரைன் (பிரதம தபாலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வின்சஸ்லோஸ், வெனிற்றா (ஜேர்மனி), நீசா, பேணாட் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மிதுலாராணி, கஸ்துலப்பர், ஜெயசீலன் (போதகர், எபனேசர் ஜெப நிலையம், வட்டுக்கோட்டை), தங்கம், இரஞ்சிதராசா, தேவி, நாதன், யோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.07.2007) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(62857)

தகவல்:
பெ.ஜெ.நிரேஷன்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நீடிக்கும் ஆடிக் கலவர அதிர்வு

இன்றைக்குச் சரியாக 24 ஆண்டுகளுக்கு முன்னர், யாழ்ப்பாணம் - பலாலி வீதியில், திருநெல்வேலியில், தபால்கட்டுச் சந்தியில் வெடித்த நிலக்கண்ணியின் அதிர்வு இன்னும் ஓயவில்லை. அந்த அதிர்ச்சியின் அலைகள் பெரும் வன்முறைப் புயலாக விஸ்வரூபம் எடுத்து, இலங்கைத் தீவை இன்றும் கலங்கடித்து சமராடிக் கொண்டிருக்கின்றன. அன்று பறந்த சிறு பொறி, இன்று ஊழித்தீயாக உரு வெடுத்து,முழு இலங்கைத் தீவையும் வெந்தணலாய் தகிக்க வைத்துக்கொண்டிருக்கின்றது.

பௌத்த - சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக, நீதியும், நியாயமும், கௌரவமும் மிக்க வாழ்வியல் உரிமை வேண்டி அஹிம்சை வழியில் - அறநெறியில் - சுமார் மூன்றரை தசாப்த காலம் சளைக்காது ஈழத் தமிழினம் நடத்திய விடுதலைப் போராட்டம் புதிய பரிமாணமும், புதிய பரிணாமமும் பெற்று, புது உத்வேகத்தோடு - புதுப்பிறப்பு எடுத்துவிட்டது என்பதை உலகுக்கு எடுத்தியம்பும் அறிவிப்பாக - கட்டியமாக - அந்தக் கண்ணிவெடித் தாக்குதல் அமைந்தது என்றால் அது மிகையாகாது.

தமிழரின் விடுதலைப் போராட்டம், புதியதோர் அத்தியாயத்துக்குள் புத்துணர்வோடும், உத்வேகத்தோடும், தீவிரத்தோடும் புகுந்துவிட்டிருப்பதை உணர்ந்துகொள்ள மறுத்த சிங்களப் பேரினவாதம்,தனக்கே உரிய திமிர்த்தனத்தோடும், செருக்கோடும், மமதையோடும் அந்த நிலைமையைத் தவறாக எடைபோட்டது.

கிளர்ச்சியும், எழுச்சியும் பெற்று புது உத்வேகத்தோடு ஆயுத வழிப் போராட்டத்துக்குத் தயாராகிவிட்ட தமிழ்த் தேசிய உணர்வை வன்முறை வழியிலான கொடூர இனக்கலவரம் மூலமும், பலாத்கார அடக்குமுறை வாயிலாகவும் அச்சுறுத்தி, நசுக்கி ஒடுக்கிவிடலாம் என்று தென்னிலங்கை கனவு கண்டது.

இந்தப் பின்னணியில்தான் தமிழ் இன அழிப்பு இலக்கின் அங்கமாக 1983 ஆடிக்கலவரம் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது.

முன்னெப்போதும் இடம்பெற்றிராத குரூர - கொடூர - வன்முறையாக இலங்கைத்தீவு எங்கும் கலவரம் விஸ்வரூபம் எடுத்துப் பிரளயமாக வெடித்தது. இன வெறியாட்டம் சுமார் ஆறு நாள்கள் சன்னதம் கொண்டு ஆடி அடங்கியபோது, அப்பாவித் தமிழர்கள் சுமார் மூவாயிரம் பேர், வெட்டியும், சுட்டும், எரித்தும் காட்டுமிராண்டித் தனமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். பல தமிழ்க் குடும்பங்கள் உயிரோடு எரிக்கப்பட்டிருந்தன. தமிழருக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள், கைத்தொழில் வளாகங்கள், சினிமா அரங்குகள், தொழிற்சாலைகள், எரிபொருள் நிலையங்கள், வாகனங்கள் கொள்ளையிடப்பட்ட பின்னர் எரித்துத் தரைமட்டமாக்கப்பட்டன.

இந்தக் கறைபடிந்த வரலாற்றுக் காலத்தில் அருவருக்கத்தக்க - மோசமான - மற்றொரு மிலேச்சத்தனமும் சிங்கள இன வெறிக் காடையர்களால் புரியப்பட்டது. சிங்களக் கைதிகளும், சிங்கள சிறைக் காவலர்களும் கூட்டுச் சேர்ந்து, சிறைக்கூண்டுகளை உடைத்து, உள்ளே நிராயுதபாணிகளாக அடைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் 53 பேரை கண்ட துண்டமாக வெட்டியும், கண்களைப் பிடுங்கியும், குடலை உருவியும் மிகக் கோரமாகப் படுகொலை, செய்து தமது மிருகத்தனத்தை வெளிப்படுத்தினர்.

தமிழரின் வாழ்வியல் உரிமையை அடியோடு மறுத்து கருவோடு வேரறுக்கும் இந்த மனிதனுக்கே அடுக்காத கொடூரம், ஞானசீலம் போதித்த புத்தனின் பெயரால் இலங்கைத் தீவில் அரங்கேறியது.

ஈழத் தமிழரின் தேசிய ஆன்மாவில் என்றும் ஆறாத வடுவை - மாறாத புண்ணை - ஆழமாக ஏற்படுத்திய மிக மோசமான துன்பியல் நிகழ்வாக அது அரங்கேறியது.

ஒருபுறம் தமிழரை சம்ஹாரம் செய்து, அடக்குவதாகவும், மறுபுறம் தமிழினத்தின் ஆணிவேரான பொருளாதார இருப்பையே அடியோடு வெட்டிச் சாய்ப்பதாகவும் இரு முனைப்பட்ட நோக்கோடு,வெகு நேர்த்தியாக திட்டமிடப்பட்டு - அரசுத் தலைமையின் பின்னணி வழிகாட்டலோடு - செயற்படுத்தப்பட்ட ஒரு கொடுங்கோன்மையாகவே அக்கலவரம் முன்னெடுக்கப்பட்டது.

ஆனால் விளைவு என்னாயிற்று.....?

வஞ்சத்தனத்தோடு சிங்களம் புரிந்த இந்தக் குரூரத்தின் விளைவு, மிகமோசமாக சிங்களத்தையே திரும்பி வந்து தாக்கி மிக ஆழமான பின்னடைவுக்குள் அதைத் தள்ளி நிற்கின்றது.

ஆடிக் கலவரத்தால் தமிழினத்தின் பொருளாதாரம் நசுக்கப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் அன்று ஆரம்பித்த அந்த வீழ்ச்சி, இன்று வரை மீள முடியாத பெரும் பொருளாதாரப் பாதிப்பாக முழு இலங்கைத் தீவையுமே கவ்வி நிற்கின்றது. அந்தக் கலவரத்தின் தொடர்ச்சியாக இன்றுவரை உக்கிரமான உள்நாட்டு யுத்தமாக விரிவடைந்து, விஸ்வரூபம் அடைந்திருக்கும் இனச்சிக்கலால், தோல்வியுற்ற நாடுகளின் வரிசையில் சேர்க்கும் அளவுக்கு முழு இலங்கையினதும் நிலைமை அதல பாதாளத்துக்குள் வீழ்ந்திருக்கின்றது.

மறுபுறத்தில், தமிழினத்தை அச்சுறுத்தி,கொடூரத்தின் மூலம் அடக்கும் சிங்களத்தின் எத்தனமும் - எண்ணமும் - நிறைவேறவில்லை. மாறாக, அது தலைகீழ் விளைவையே ஏற்படுத்தியது. தமிழர்கள் அஞ்சி, அடங்கவில்லை. ஆக்ரோஷமுற்று, ஆயுதவழிப்போரை பதிலடியாக - பாடமாக - சிங்களத்துக்குப் போதித்துப் புரியவைத்தார்கள்.

அந்தக் கொடூரம் மூலம் தமிழர்களுக்கு எதிராக சிங்களம் அரங்கேற்றிய பல்பரிமாண ஒடுக்குமுறை பாரதூரமான விளைவுகளுக்கு வழிசமைத்தது. இனமுரண்பாட்டை அது கூர்மைப்படுத்தியது. இலங்கைத் தீவில் தமிழர் தேசம், சிங்களவர் தேசம் ஆகிய இரு தரப்புகளிடையே இன நல்லிணக்கமும், சமரச சகவாழ்வும் சாத்தியமேயில்லை என்ற உணர்வு நிலைக்கு அது தமிழரை உசுப்பேற்றியது. நாடுகள், கண்டங்கள், தேசங்கள் கடந்து தமிழர்கள் மத்தியில், தேசிய உணர்ச்சியும் விடுதலை எழுச்சியும் மடைவாய் திறந்த வெள்ளம் போல் கரை மீறிப் பிரவாகம் எடுக்க அது வழிகோலிற்று.

ஒடுக்குமுறையின் உச்சக்கட்ட வடிவமாக உருப்பெற்ற ஆடிக்கலவரம், பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் தமிழரின் சுயநிர்ணயப் போராட்டத்தை உற்பவித்தது.

இந்தக் கலவரம் மூலம் தமிழ்த் தேசிய மறுமலர்ச்சியைத் தூண்டி, தமிழரின் தனியரசுப் போராட்டத்தை வீறுகொள்ள வைத்து, இந்திய ஆதரவோடு ஆயுதப் போராட்டத்தைத் தமிழர்கள் தீவிரப்படுத்துவதற்கான அகப்புறச் சூழல்களை உருவாக்கிக் கொடுத்துத் தன் குறுகிய - குரூர - செயற்பாட்டின் மூலம் தன் தலையிலேயே தானே மண்ணை அள்ளிப் போட்டுக்கொண்டது சிங்களம்.

# கிழக்கு உதயம் - அரசு எதிர்பார்த்தது போன்று மக்கள் மத்தியில் பெரும் உற்சாகம் இருக்கவில்லை!

## கொழும்பில் படையினர் முற்றுகையே தொனித்தது

கொழும்பு,ஜூலை23

கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாக அறிவித்து பெரும் எடுப்பில் பிரசாரங்கள் செய்து, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரசாங்கம் விழாவெடுத்துக் கொண்டாடிய போதிலும் எதிர்பார்த்தது போன்று நாடளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் உற்சாகம் கரைபுரண்டு ஓடவில்லை. அரசு ஏற்பாடு செய்திருந்த விழாக்களில் எதிர்பார்க்கப்பட்ட அளவு உற்சாகத்தைக் காணமுடியவில்லை.

தொப்பிகலவில் இராணுவம் பெற்ற வெற்றியைக் கடந்த வியாழக்கிழமை கொழும்பில் அரசாங்கம் கொண்டாடியது தொடர்பாக எழுதியுள்ள கட்டுரையில் பிரபல அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பான விமர்சகர் இக்பால் அத்தாஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் மத்தியில் உணர்ச்சி வெள்ளத்தைத் தூண்டிவிடும் வகையில் தொப்பிகல வெற்றி பெரும் எடுப்பில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும் ஒரு சிறுபகுதி இலங்கையர்கள் மாத்திரமே இந்த நிகழ்வுகளில் அக்கறை காட்டினார்கள். தமது வீடுகளில் அலுவலங்களில் வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களில் கொடிகளை ஏற்றியதோடு அவர்கள் காரியத்தை நிறுத்திக்கொண்டார்கள் குதூகலமான தொனியில் ஏதும் நடைபெற்றதாக இல்லை.

### ஆறுதல் பெருமூச்சு

கடந்த வியாழக் கிழமை நிகழ்வுகள் முடிந்த கையோடு, மேல்மாகாணத்திலுள்ள பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலீஸ் படைகளின் உயர்மட்ட அதிகாரிகள் பெரும் இக்கட்டிலிருந்து விடுபட்டதுபோல் ஆறுதல் பெருமூச்சு விட்டார்கள் அந்த ஆறுதல் பெருமூச்சு விளங்கிக்கொள்ளக் கூடியதாக இருந்தது. ஏனென்றால் மேல் மாகாணத்தில் ஏற்கனவே ஊடுருவிவிட்டதாகக் கருதப்பட்ட புலிகளின் ஆறு கரந்தடிப் பிரிவுகள் ஆங்காங்கே தாக்குதல்களை நடத்துவதற்கு திட்டங்கள் தீட்டியிருந்தார்கள் என்று கருதப்பட்டது. இவை கொழும்பில் நடைபெறவிருந்த வெற்றிவிழாவைக் குழப்பும் நோக்கத்தைக் கொண்டவை என்றும் கூறப்பட்டது. ஆனால், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை.

இவ்வாறு இக்பால் அத்தாஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் தமது பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கிழக்கு விடுவிக்கப்பட்டுவிட்ட போதிலும் கொழும்பு நகரில் புலிகள் நடத்தக்கூடிய தாக்குதல்களை முறியடிக்க முழுநேர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருந்தது. அதனால் இராணுவ, பொலீஸ் படைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டியிருந்தது.

கொழும்பு மாநகரம் அன்றைய தினம் பாதுகாப்புப் படைகளின் முற்றுகையில் இருந்தது என்றே கூறலாம்.

பாதுகாப்பு நடவடிக்கை எனும் பொழுது வாகனங்கள் மற்றும் ஆள்களைத் தடுத்துநிறுத்தி சோதனையிடுவதையும் உள்ளடக்கும்.

ஆனால் வர்த்தக மற்றும் வியாபாரப் பிரிவினருக்கு இது நல்ல செய்தியாக அமைய முடியாது.

கொழும்பு மாநகரில் தற்போதைய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் சில காலத்துக்கு நீடிக்கவே செய்யும். எனவே இலங்கையில் முதலீடு செய்ய விரும்புகிறவர்கள் இந்த விடயங்களில் எவ்விதமான பிரதிபலிப்புகளை மேற்கொள்வார்கள் என்று கூறமுடியாது.

### கிழக்கில் புலிகளின் செயற்பாடுகள்

கொழும்பின் பாதுகாப்பு விடயங்கள் இப்படி இருக்க கிழக்கின் நிலைமை எப்படி இருந்தது? விடுதலைப் புலித் தீவிரவாதிகள் கிழக்கிலிருந்து முழுமையாக விரட்டியடிக்கப்பட்டுவிட்டதாக அரசாங்கம் கூறிக்கொண்ட அதேவேளை, சுமார் 50 பேரைக் கொண்ட புலிப் போராளிகள் குழுவொன்று கிழக்கில் ஊடுருவி இருப்பதாக கூட்டுப்படைத் தலைமையகத்துக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதற்கு முன்னரே சுமார் 200 போராளிகள் ஊடுருவி தாக்குதல்களுக்கு ஆயத்தங்கள் செய்து வருவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தன.

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கிழக்கில் இருந்துவருகிறார்கள் என்பதையே இந்தத் தகவல்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஹேரத் அபயவீர சுட்டுக் கொல்லப்பட்டார். அடுத்த நாள் கந்தளாய்க்கு அருகில் சிற்றாறு என்ற இடத்தில் இராணுவக் கப்டன் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டு இரு படையினர் காயமடையச் செய்யப்பட்டனர். இவை அனைத்தும் எதைக் காட்டுகிறது என்றால், கிழக்கில் பிரதேசம் எதனையும் விடுதலைப் புலிகள் தம் வசம் கொண்டிருக்காவிட்டாலும் அப்பகுதிகளில் அவர்கள் இன்னமும் செயற்பட்டு வருகிறார்கள் என்பதே இது. அரசாங்க அதிகாரிகளுக்கு மட்டுமல்ல இராணுவ பொலீஸ் உயர் அதிகாரிகளுக்கு இது அச்சுறுத்தலாகவே இருக்கப்போகிறது. அச்சுறுத்தல்களைக் குறைப்பதானால் அதிக பலம் மட்டுமல்ல அதிக வளங்களும் தேவைப்படும் - என்று உள்ளது.

(அ-ப)

# அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகம் சீர்கெட்டுப் போனது ஏன்?

மக்கள் மன்றம்

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகத்தில், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வறுமைக் கோட்டுக்கு மேற்பட்ட 'உ' (உப உணவுப்) பங்கீட்டு அட்டை உடையவர்களைப் புறந்தள்ளி கைவிட்டு விட்டதா என்ற கேள்வியும் புகார்களும் மேலெழுந்து நிற்கின்றன.

இறுதியாக, வழமையான பங்கீட்டு அடிப்படையில் ஏப்ரல் மாதத்துக்கான இலவச நிவாரணமாக உயர்பாதுகாப்பு வலயத்தில் இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள், போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள், வறுமையிலும் வறுமையானவர்கள், வலுவிழந்தோர், தொழிலிழந்தோர் குடும்பங்கள் மற்றும் சமுர்த்தி முத்திரை உடையவர்கள், உலக உணவுத் திட்டத்தின் கீழ் பங்கீட்டு அட்டை உடைய குடும்பங்கள் என்று, 'உ' உப உணவுப் பங்கீட்டு அட்டை உடையவர்கள் தவிர மற்றைய அனைவருக்கும் தரமான சம்பா அரிசியும் ஏனைய உப உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

குடாநாட்டில் நெருக்கடி நிலை தோன்றிய கடந்த ஓகஸ்ட் மாத்தில் இருந்து 'உ' உப உணவுப் பங்கீட்டு அட்டை உடைய குடும்பங்கள், இத்தகைய பங்கீட்டு உணவுப் பொருள்களை பணம் செலுத்தியே கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இருந்து பெற்றுவந்தன.

ஆனால் ஏப்ரல் மாதத்திலிருந்து இத்தகைய விநியோகம் 'உ' உப உணவுப் பங்கீட்டு அட்டை உடையவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பணம் செலுத்திக் கூட சங்கக் கிளைகளில் இருந்து சம்பா அரிசியோ அல்லது வேறு எந்தரக அரிசியோ வாங்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 50 ரூபாவுக்கு வாங்கக்கூடிய ஒரு கிலோ சம்பா அரிசியை தனியார் கடைகளில் 80 ரூபா செலுத்தி வாங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் அவர்கள்.

கடந்த ஓகஸ்ட் மாதம் குடாநாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை காரணமாக அரச அதிபரினால் கப்பல்கள் மூலம் எடுத்துவரப்பட்டு ஏகபோகமாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்ட அரிசி முதலான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகத்தில் ஆரம்பத்தில் சிறிது குறைகள் இருந்தாலும், பின்னர் நாளடைவில் மிகவும் திருப்திகரமான முறையில் பாராட்டத்தக்கவகையில் அமைந்தது.

அரிசியைப் பொறுத்தவரையில் கோரா, சம்பா, பச்சைத் தீட்டல் என மிகத் தாராளமாகப் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. மே, ஜூன் மாதங்களுக்கான நிவாரண விநியோகம் கூட இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

கப்பலில் அரிசி வருகின்றது. ஏனைய நுகர்வுப் பொருள்களும் வருகின்றன; இறக்கப்படுவதாக பத்திரிகைளிலும் செய்திகள் வருகின்றன.

அரச அதிபர் வாராந்தம் ப.நோ.கூ. சங்கத் தலைவர்கள், முகாமையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளை அழைத்துக் கூட்டம் வைத்து கலந்துரையாடல்கள் நடத்துகின்றார். விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

வழங்கல் கட்டளைகளைப் பெற்று களஞ்சியங்களில் உணவுப் பொருள்களைப் பெற்று விநியோகங்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் ......!

உதாரணத்துக்கு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் வெறுமனே காட்சியளிக்கின்றன.

அரிசி இல்லை. பல சந்தர்ப்பங்களில் 'மா' இல்லை. சவர்க்காரம், பால்மா வகைகள் இல்லை. தேங்காய் எண்ணெய் இல்லை. அத்தியாவசிய உணவுப் பொருளான உப்பு கடந்த மூன்று மாதங்களாக காணக் கிடைக்காத பொருளாகிவிட்டது.

கேட்டால் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகிறார்கள்.

இவற்றில் முக்கியமாகக் கவனத்துக்கு எடுக்கவேண்டிய விடயம் என்னவெனில் ப.நோ.கூ சங்கங்கள் ஏகபோக உரிமையுடன் பங்கீட்டு அட்டைகளுக்கு நுகர்வுப் பொருள்களை கட்டம் கட்டமாக விநியோகித்து வந்த காலத்தில் முக்கிய உணவுப் பொருளான அரிசி தாராளமாகப் பெறக்கூடியதாக இருந்தது. மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு இருக்கவில்லை. சில பொருள்களுக்கு தட்டுப்பாடு இருந்தாலும், பொருள்களின் விலையில் ஒரு கட்டுப்பாடு, நிதானமான விலை இருந்து வந்தது. அரச அதிபரின் விலை நிர்ணயத்தை சங்கங்களால் மீற முடியவில்லை.

இன்று தனியார் தாராளமாக நுகர்வுப் பொருள்கள், உணவுப் பொருள்கள் எடுத்து வரக்கூடிய நிலைமை

**சி.கிருஷ்ணபிள்ளை**
**(ஆவரங்கால்)**

ஏற்பட்ட பின்னர் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அதேநேரம் விலைகளும் அதிகரித்துள்ளன. நிலைமை சீர்கெட்டுவிட்டது.

இதன் காரணமாக வறுமைக் கோட்டுக்கு மேற்பட்டோர், 'உ' உணவுப் பங்கீட்டு அட்டை உடையவர்கள் மிக உச்சக் கட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்குப் பிரதான - உண்மையான காரணம் தான் என்ன?

ஆகவே அரச அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள், கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர் இவ் விடயங்களை உடன் கவனத்துக்கு எடுத்து ஆக்கபூர்வமான முறையில் நீதியான, நியாயமான தீர்வுக்கு வரவேண்டும்.

வறுமைக்கோட்டுக்கு மேற்பட்டவர்களும், உட்பட்டவர்களும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் பங்கீட்டு அடிப்படையில் தாராளமாக அத்தியாவசியப் பொருள்கள் பெற்றமை போன்று எதிர்காலத்திலும் பெற வழி செய்தல் வேண்டும். செய்வார்களா?

### நாளை

| | |
|---|---|
| ஆடி - 8 | செவ்வாய்க்கிழமை 24.07.2007 |
| திதி : தசமி | பின்னிரவு 04.50 |
| நட்சத்திரம் : விசாகம் பின்னிரவு : 08.47 | |
| சுபநேரம் | : 10.33 - 12.03 |
| ராகுகாலம் | : 03.02 - 04.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக விலை கொண்டது ஜனநாயகம் கிடைப்பதற்கு மிக அரியது சமாதானம்

## சு.க.வின் 17ஆவது மாநாட்டில் ஜனாதிபதி கருத்து

கொழும்பு, ஜூலை 23

"உலகின் அதிக விலை கொண்டது ஜனநாயகம். கிடைப்பதற்கு அரியது சமாதானம்" -இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மஹரகம இளைஞர் சேவைகள் மன்றத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 17ஆவது சம்மேளன மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசியபோது கூறியதாவது:-

காலம் வேறுபட்டது, ஆனால் குணாம்சங்கள் ஒன்றுதான். உலகில் அதிக விலை கொண்டது ஜனநாயகம். ஜனநாயகம் கிடைப்பதற்கு பிரதானமானது சமாதானம் என்றே நான் கருதுகின்றேன்.

அதிக விலை உடைய இந்த இரண்டையும் பெறுவதற்காக எம்முடன் இணைந்து கொண்டுள்ள கட்சிகளுடன் இணைந்து முன்னோக்கிச் செல்லவேண்டியுள்ளது.

கட்சிக்குள்ளேயே ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த முற்பட்டவர்கள் இன்று உட்கட்சி ஏகாதிபத்தியம் குறித்துப் பேசுகின்றனர்.

அன்று சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாருக்கு எதிராக 1964இல் அரசைக் கவிழ்த்து ஐக்கிய தேசியக் கட்சியைக் கொண்டுவர போடப்பட்ட சதித்திட்டமே இன்றும் நடந்து கொண்டிருக்கின்றது. இது குறித்து கட்சியினர் அவதானமாக இருக்கவேண்டும் - என்றார்.

இதேவேளை, இங்கு உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன கூறியதாவது:-

கிழக்கின் வெற்றி மற்றும் அரசின் காத்திரமான முன்னேற்ற நடவடிக்கைகள் காரணமாக அரசு மிகவும் பலமான நிலையில் உள்ளது. எதிர்க்கட்சியோ மற்றும் எந்தவொரு குழுவோ அரசைக் கவிழ்க்கமுடியாது.

எக்காரணம் கொண்டும் நாடாளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது. அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் குறித்து மக்களுக்கு தெளிவூட்டுவதற்காக தொடர்ந்து பொதுக் கூட்டங்கள் நடத்தவுள்ளோம்.



வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றைப் பெறும் நோக்கில் ஆலோசனைகளை சமர்ப்பிக்கும்படி சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசின் பலம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது மக்களுக்கு அறிவுறுத்தப்படும் - என்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பிரதமர் உட்பட அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர். (சி)

## வதிரி மேற்குப் பகுதியில் நேற்றுச் சுற்றிவளைப்பு

வதிரி மேற்குப் பகுதி நேற்றுக் காலை படையினராலும் பொலிஸாராலும் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இடம்பெற்ற இத் தேடுதலில் இளம் வயதினர் விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். சிலரின் அடையாள அட்டைகளை பெற்றுச் சென்ற படையினர் அவற்றை படை முகாமில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கூறினர். (அ-1-155)

## ஆணைக்குழுவில் பதிவை மேற்கொள்ளக் கோரிக்கை

குடும்பத் தலைவர் - தலைவியை இழந்த குடும்பம் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தொடர்பான விவரங்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகின்றன.

பாதிப்புக்கு உள்ளாகிய குடும்பத்தினர் 3ஆம் குறுக்குத் தெரு, முதலாம் இலக்கத்தில் உள்ள ( O.L.R. தேவாலயத்திற்கு அருகில்) அலுவலகத்தில் உடனடியாக பதிவு செய்யுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1-11)

## சமஷ்டித் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குச்சமனான வேறுமுறையொன்றையோ ஒருபோதும் அரசு ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அத்தகையதொரு தீர்வைக் காணுமாறு மக்கள் எனக்கோ எனது அரசுக்கோ ஆணை தரவில்லை. அனுமதி வழங்கவில்லை. எனவே, மக்களின் விருப்பத்துக்கு மாறாக சமஷ்டித் தீர்வை முன்வைப்பதற்கோ, அதுபற்றிப் பரிசீலிப்பதற்கோ அரசுக்கு அருகதையில்லை -

அதேவேளை, தற்போது நடைமுறையிலுள்ள மாகாணசபை முறையை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதா, இல்லையா என்பது குறித்து மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது பற்றியும் அரசு ஆராய்ந்து வருகின்றது. - என்றும் ஜனாதிபதி அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களிடம் தெரிவித்திருக்கிறார். (அ-சி)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சமீபத் தில் தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்துஜேர்மன் அரசுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது. இலங்கை அமைச்சரின் இந்தப் பகிரங்கக் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஜேர்மனின் வெளிவிவகார அமைச்சு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என்றும் -

இக்குற்றச்சாட்டை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியுமா என விரைவில் இலங்கை அரசிடம் உத்தியோக பூர்வமாக விளக்கம் கோருவதற்கு ஜேர்மன் அரசு தீர்மானித்திருக்கின்றது என்றும் -

கொழும்பிலுள்ள ஜேர்மனிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை கடந்த மாத இறுதி வரை ஜேர்மன் வகித்துவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது இடத்துக்கே கொமடோர் குமரேசன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (அ-1-151)


கருத்தரங்கு - கணக்கீடு
திரு.வின்சன் (B.B.A. Spl)
குறிப்பு: Royal College கொழும்பு வணிக வள நிலைய பேப்பர்கள் விடையளிப்பதுடன் புள்ளி வழங்கல் திட்டமும்
24.07.2007 (Tue. 8.30)
ஐடியல் மானிப்பாய்.

A/L 2009 பிரிவு II
வணிகக்கல்வி T.சுரேசன்
* ஐடியல் அக்கடமி யாழ்ப்பாணம் (திங்., வியா. - 3.15)
* Business Academy மில்வைற் முன், தட்டாதெரு. (புதன், வியா. - 4.30 - 5.30)
* ஐடியல் அக்கடமி சண்டிலிப்பாய் (சனி, ஞாயிறு - 9-10)


# நுகேகொட - தெல்கந்த சந்தியில் சக்தி வாய்ந்த கிளைமோர் மீட்பு!

## ஜனாதிபதிக்கு இலக்கு வைக்கப்பட்டதா?

கொழும்பு, ஜூலை 23

கொழும்பின் புறநகர்ப்பகுதியான நுகேகொட - தெல்கந்த சந்தியில் - சந்தை ஒன்றிலிருந்து - 8 கிலோகிராம் நிறைகொண்ட கிளைமோர் குண்டொன்றை நேற்று பொலிஸார் மீட்டிருக்கின்றனர்.

வாழைப்பழ சீப்புகள் அடங்கிய பை ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தக் கிளைமோர்க் குண்டு பற்றிய தகவலை சந்தைப்பகுதியில் நின்றிருந்த சிவிலியன்கள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து நேற்று பிற்பகலில் குண்டு மீட்கப்பட்டதாக பொலிஸ் தரப்பில் பேச வல்ல அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 17ஆவது வருடாந்த சம்மேளன மாநாடு நேற்று இடம்பெற்ற மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு நான்கு கிலோமீற்றர் தொலைவிலேயே இந்தக்குண்டு மீட்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலக்குவைத்தே இந்தக் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என தலைநகரில் நேற்று மாலை வேகமாக தகவல் பரவியது. எனினும், இதனை மறுத்துரைத்த பொலிஸார் "விடுதலைப் புலிகளினால் பொதுமக்களை இலக்குவைத்தே இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது" - என்று தெரிவித்தனர். மாநாட்டிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஹெலிக்கொப்டரில் தான் வந்து திரும்பினார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்கந்த சந்தியிலிருக்கும் ஞாயிறு சந்தையில் கேட்பாரற்றுக் கிடந்த பையிலிருந்து கிளைமோர் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியெங்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு சந்தையைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது. பின்னர் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து குண்டை செயலிழக்கச் செய்தனர்.

இதேவேளை - கிளைமோர் கண்ணி மீட்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் பொலிஸாரும் படை யினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கை யில் ஈடுபட்டனர்.

இதன்போது சந்தேகத்தின்பேரில் ஐவரைப் பொலிஸார் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர் என்று கூறப்பட்டது.

இதேவேளை, பலரிடமும் விசாரணைகளை நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## கப்பம் பெற முயன்றவர் பொலிஸாரின் சூட்டுக்கு பலி

கொழும்பு, ஜூலை 23

ராஜகிரிய பகுதியிலுள்ள வர்த்தகர் ஒருவரிடம் கப்பம் பெற முயன்ற நபர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

## கோதுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு ரூபாவால் அதிகரிக்கப்பட்டதை அடுத்து பாணின் விலை ஒரு ரூபா ஐம்பது சதத்தால் அதிகரிக்கப்படவேண்டுமென பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் பராக்கிரம தஸநாயக்க தெரிவித்துள்ளார்.(சி)

## பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் தொடர்பாக யாழ். அரச அதிபருக்கும் துணைவேந்தருக்கும் மாணவர்கள் தகவல் தெரிவித்தனர் என்று அறிய வந்தது. (அ-1)

## 83 கறுப்பு ஜூலை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு மெல்பேர்ன் நகர சதுக்கத்தில் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் 6 மணிவரை இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்களான ஈழத் தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்திருக்கின்றனர்.

இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு புலம்பெயர்ந்து மெல் பேர்னில் வாழும் அனைத்துத் தமிழ்மக்களும் திரண்டு வந்து பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (சி)


BEACON
நாடகமும் அரங்கியலும்
கருத்தரங்கு
By S.J.சுதன்
ஆரம்பம் நாளை (24.07.2007)
செவ்வாய் நேரம் 9 am
Proprietor:- N.Poobalasingam


# திருமலை திரியாயவிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஜூலை 23

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய கிராம மக்கள் அச்சம் காரணமாக அங்கிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று மாதங்களில் திரியாய கிராமத்தில் பதினொரு தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் போனதைத் தொடர்ந்து, மக்கள் அங்கு வசிக்க அச்சமடைந்துள்ளனர்.

1987 மற்றும் 1988ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வன்முறைகளால் இக்கிராமத்தில் வசித்த 1,200 வரையான குடும்பங்கள் இடம்பெயர்ந்திருந்தன.

பின்னர் 2002ஆம் ஆண்டில் மீளக் குடியமர்ந்ததில் 850 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன. தற்போது பதினொரு தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டும், காணாமல் போயும் உள்ள நிலையில், தொடர்ந்தும் இக்கிராமத்தில் மக்கள் வசிக்க அச்சமடைந்து வெளியேறி வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சை திருமலையில் நாளை ஆரம்பமாகிறது

திருகோணமலை,ஜூலை 23

திருகோணமலை மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை ஆரம்பமாக உள்ளன.

அந்த மாவட்டத்தில் பணிபுரியும் 158 தொண்டர் ஆசிரியர்களும் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி அண்மைக்காலமாக போராட்டங்களை நடத்தி வந்தனர்.

திருகோணமலை கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாளை தொடக்கம் 26ஆம் திகதி வரை வலய அலுவலகத்திலும் -

மூதூர் வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் மூதூர் வலய அலுவலகத்திலும் -

கிண்ணியா வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 30, 31ஆம் திகதிகளில் கிண்ணியா வலய அலுவலகத்திலும் -

ஈச்சிலம்பற்று, மூதூர் பகுதிகளில் உள்ள தமிழ் பாடசாலைகளில் பணிபுரிபவர்களுக்கு ஓகஸ்ட் முதலாம், இரண்டாம் திகதிகளில் திருமலை வலய அலுவலகத்திலும் - நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறும். (அ-1-151)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியின் முன்னரங்கப் பகுதிகளில் கடந்த சில வாரங்களாக இரு தரப்பினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமையும் தம்பனைப் பகுதியில் மோதல் இடம்பெற்றது தெரிந்ததே. (அ-1)


மானிப்பாயில் முதன் முதலில்
பிரிவு - 3 ஆரம்பம்!!
ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டும்.
(தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களும் ஆரம்பம்!!)
வகுப்புக்கள்யாவும் 26.07.07 அன்று 12.30கு ஆரம்பம்.
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay. T.P:- 0777-110862
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org